என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்


**சிதம்பரம் தேர்விழா அபிஷேகம் 4,5 ஜனவரி 2015**

December 2014

FREE ISSUE


# லண்டன் தமிழர் தகவல்

London Tamil's Information




மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest


லண்டனில் No1
நகை மாளிகை
Lakshmis
Jewellers
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை


Niru BRAND®
Bringing Great Food to Life.
The No 1 Brand
Niru BRAND®
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

தரமான தயாரிப்புகளையே
வாங்குங்கள்
என்றும் தரமானவை
நிரு
தயாரிப்புகள்



# தமிழர் தகவல்
## Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்

திருவள்ளுவர் ஆண்டு 2045
நந்தன - கார்த்திகை
மலர் : 13
இதழ் : 139
டிசம்பர் - 2014

முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ்அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com


படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே

4000 பிரதிகள்

தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!




வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!


Shastra Cards
World class designer invitations
in affordable prices at
www.shastracards.com
#71, 2nd Floor, Dr. Radhakrishnan Salai, Mylapore, Chennai - 600 004. INDIA
Ph : 91 44 4217 2200 / 91 76 333 222 / 91 76 322 444 info@shastracards.com

LycaFly
Travel the world for less

24x7
Call us now 0207 132 32 32
or visit www.Lycafly.com

## THE MOST POPULAR AGENT OF SRILANKANS



# £50 Free
## Lycamobile top-up
### with every single return ticket to
# Colombo



T&C apply

SriLankan Airlines
## Non stop flights to Colombo
# fr £205 + taxes

OMAN AIR
QATAR AIRWAYS
BRITISH AIRWAYS

We work with over 160 airlines

**Best deals of the week**

| | | |
|---|---|---|
| New York | fr | £439 |
| Chennai | fr | £441 |
| Dubai | fr | £298 |
| Singapore | fr | £488 |
| Bangkok | fr | £457 |
| Toronto | fr | £444 |
| Melbourne | fr | £670 |

Incl Taxes

**WEMBLEY**
14 Ealing Road, Wembley, London HA0 4TL · 0207 132 0055

**EAST HAM**
180 High Street North, East Ham E6 2JA · 0207 132 0056

**TOOTING**
232 Upper Tooting Road, London SW17 7EW · 0207 132 0057

**MILTON KEYNES**
16 Stratford Road MK12 5LJ
0207 993 6355 / 0190 822 7562

IATA

# Chennai Spice

Restaurant & Banqueting Suite

213-217, Hertford Road, Edmonton, N9 7ER



## Free Banqueting Hall

- Monday - Thursday - Except Bank Holidays
- Large Modern Banqueting Hall for Wedding, Wedding Reception, Birthday Party, and all other events.
- Unlimited Maincourse food & Drinks for the Party at reasonable price



## Restaurant

- Open 7 days a week
- Live Music on Every Fridays
- Live Sports in Big Screen
- New Menu with Appam, Kulal Puttu and Traditional Dishes
- Free Home Delivery upto 3 miles



## Catering

- Catering for Arangetrams, Birthday Parties, Wedding, Wedding Reception and all other functions
- On site Catering available on request



## Event management

- Excellent Management of your functions
- Different varities of food (Sri Lankan, South Indian/North Indian and Chinese)
- Varities of service (Table service, Buffet style, Banana Leaf service etc)
- Decoration & DJ



மீண்டும்
புதுபொலிவுடன்
MITHUS
MITHUS
Jewellers
322-324 London Road
Croydon CR0 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792




DOSA
LOUNGE
A Taste of Pure Spice Heaven
SRI LANKAN & SOUTH INDIAN
RESTAURANT AND TAKE AWAY
ALL VEGETARIAN FOODS ARE COOKED SEPARATELY IN OUR VEGETARIAN KITCHEN AND SERVED ON SEPARATE PLATES
PARTY/ FUNCTION HALL
AVAILABLE FOR HIRE.
SMALL HALL UP TO 35 SEATS,
BIG HALL UP TO 120 SEATS
FREE DELIVERY (6PM TO 10PM) WITHIN 3 MILES RADIUS, MINIMUM ORDER OF £20.00
OUTDOOR CATERING FOR PARTIES, FUNCTIONS ETC AVAILABLE
OPENING TIMES
MONDAY – SUNDAY
11AM – 11PM
திங்கள் அன்று விடுமுறை
Tel: 020 8684 6661
5-7 St.James's Road, West Croydon, CR0 2SB
www.dosalounge.co.uk





Rathy Jewellers Ltd
Opening Hours
Mon-Sat 10 am
to 6.30 pm
Sun 12 Noon
to 6.30 pm
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்
The Leading Jewellery Store
in London with the Largest
Selection including
Diamond Jewellery.
Thaali Kodi and all
Studded Jewellery
WEMBLEY BRANCH
28 Ealing Road, Wembley
Middlesex HA0 4 TL, 020 8903 3063
TOOTING BRANCH
209 Upper Tooting Road
Tooting SW 17 7TG, 020 8682 2233
எங்களிடம் வரும் பழைய நகைகள் புதுப்பிக்கப்பட்ட
பின்னர் தான் மீளத் தயாரிக்கப்படுகிறது அதனால்
எல்லா நகைகளுக்கும் 22கரட் சரியாக இருக்கும்.


பிரபாகரன் 60
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்
நன்றியோடிருப்போம்


நினைவு அஞ்சலி
அமரர்
V.நவரத்னம்
அவர்களின்
எட்டாவது
நினைவுநாள்
மறைவுநாள் : 22.12.2006

# மாவீரர் நாள் 2014



மாவீரர் நாள் நிகழ்வு லண்டனில் மிகச்சிறந்த முறையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அலைகடல் போல் பங்கேற்ற உறவுகளுக்கும் ஒருங்கிணைத்த தோழமைக்கும் தமிழர் தகவலின் நன்றிகள்!

அன்பான உறவுகளுக்கு,

தமிழர் தகவல் தலையங்கத்தைப் பொறுத்தவரை, தமிழ் இனம், மொழி, சைவம் பற்றிய என்னுடைய எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளும் பகுதியாகவே வெளிவந்து கொண்டிக்கிறது என்பதை நீங்கள் அனைவருமே அறிவீர்கள். அந்தப் பகுதியில் சொல்லப்படும் - பகிர்ந்து கொள்ளப்படும் செய்திகள் அனைத்துமே, என்னுடைய மனச்சான்றுக்கு உட்பட்டு, நேர்மையாகவும், நியாயமாகவும் அமைந்தவை என்று என்னால் உறுதியாகக் கூறமுடியும். அந்த உண்மையின் அடித்தளத்தில் நின்று கொண்டு, ஒரு முக்கியச் செய்தியை, கோரிக்கையாகவே உங்கள் அனைவரின் முன்னும் வைக்க விரும்புகின்றேன். புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் வாழுகின்ற பகுதிகளிலுள்ள கோயில்களில் எல்லாம், தேசியத் தலைவர் பிரபாகரன் படத்தை வைத்து, நம் நன்றியைக் காட்ட வேண்டும் என்பதே என் கோரிக்கை. நம்மைக் காப்பவர் கடவுள் என்றால், தேசியத் தலைவரும் என்னைப் பொறுத்தளவில் கடவுள்தான்.

இன்று புலம்பெயர்ந்த மக்களிடையே ஒரு வேதனையான போக்கைப் பார்க்க முடிகிறது. விடுதலைப்புலிகளையும், தேசியத் தலைவரையும் சிறிது சிறிதாகப் புறந்தள்ளுகின்ற நன்றியற்ற போக்குதான் அது.

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

என்றார் நம் பாட்டன் வள்ளுவர். நன்றியறிதல் என்பது தமிழர்களின் இரத்தத்தில் கலந்து கிடக்கும் உன்னதமான பண்பு. நன்றிக்குத் தனி அதிகாரமே படைத்தவர்கள் நாம். நம் மண்ணும், மக்களும் சிங்கள இனவெறியர்களால் எத்தனை கொடூரமாகச் சிதைக்கப்பட்டனர் என்னும் துரோக வரலாற்றை நாம் அறிவோம். ஈழ விடுதலைப் போராட்டக் களத்தில், அறவழியிலும், அதைத் தொடர்ந்து ஆயுதமேந்தியும் களமாடி மண்ணில் விதையானார்கள் நம் மாவீரர்கள். இலங்கைத் தீவுக்குள் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருந்த இனமான தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை, உலக அரங்குகளுக்குக் கொண்டு வந்தவர் தேசியத் தலைவர் பிரபாகரன் என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்றைக்கு, லட்சக்கணக்கான ஈழத்தமிழ் மக்கள் உலகெங்கும் பரவி, காலூன்றி நிற்கின்றனர் என்றால் அதற்குக் காரணம் தேசியத் தலைவர்தான்.

கோயில்களில், விளக்குப் போட்டுக் கொடுத்தவர்களின் படத்தையும், விளக்கெரிக்க எண்ணை வழங்கியவர்களின் படத்தையும் கூட, நன்றியோடு, கொடையாளர்கள் என்று சொல்லி வைத்திருக்கிறோம். அதைத் தவறு என்று சொல்லவில்லை. அதேநேரத்தில், நமக்கு வாழ்வளித்த, உலக அரங்கில் தமிழரை தலைநிமிர வைத்தத் தன்னலமற்ற தலைவனின் படத்தையும் வைக்க வேண்டும் என்றுதான் சொல்கிறோம்.

"மொழியாகி,
எங்கள் மூச்சாகி - நாளை
முடிசூடும் தமிழ்மீது உறுதி!
வழிகாட்டி எம்மை
உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி!
விழிமூடி இங்கு
துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி!
இழிவாக வாழோம்
தமிழீழப் போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி!

என்று நவம்பர் - 27இல் மாவீரர் நாளன்று, ஒவ்வோராண்டும் உறுதி எடுக்கிறோமே, அதற்கு உண்மையாக நாம் இருக்க வேண்டாமா? நன்றி மறந்த இழி நிலைக்கு ஆளாகலாமா?

தமிழ் இனத்தையும், மொழியையும் அடையாளமே தெரியாமல் அழித்தொழித்து விடத் துடித்துக் கொண்டிருந்த, சிங்கள இன வெறி ஆட்சியாளர்களிடம் இருந்து, நம்மைக் காத்து, சற்றே ஆசுவாசப்பட்டுக்கொள்ள வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தவர்கள் விடுதலைப் புலிகள். சின்னஞ்சிறிய அழகிய தீவான இலங்கைத் தீவில், தமிழ் இனத்தையே ஆழமாகப் புதைத்துவிட நினைத்தவர்களின் நினைப்பில் மண்ணைப் போட்டு, இன்றும் ஈழத்தமிழினம் உலகளாகிய அளவில் வாழ்ந்து கொண்டிருக்கக் காரணமாயிருப்பவர்களை நாம் மறக்கலாமா? தன்னுடைய குடும்பத்தையே போராட்டக் களத்தில் முன்னிறுத்தி, மாவீரர்களாக்கிய மகத்தான தலைவர் அல்லவா அவர்? அந்தத் தியாகத்திற்கு ஈடாக நம்மால் எதைக் காட்ட முடியும்? நன்றியைத் தவிர!

# முகவரி இலக்கம்

கவிதை : அறிவுமதி

ஓவியம் : டிராட்ஸ்கிமருது



நமக்கெனப் பிறந்தான்
தமிழ்ப் பிள்ளை
அவன்
உயரத்தை அளக்க
மலையில்லை!

வல்வெட்டித் துறை
கொடுத்த
கலங்கரை விளக்கம்

அவன்
முகம்தானே
நமக்கெல்லாம்
முகவரி இலக்கம்

அறுபதைத் தொட்டுத்
தாண்டுகிறான்
அவன்தான்... அவன்தான்
அறத்தமிழ் விடுதலை
தூண்டுகிறான்

துணிவுடன் கிழித்தான்
போர்க்கோடு
அவன்
துளியும் நெளியா
நேர்க்கோடு

ஈழம்
அவனது
தேன்கூடு
அதை
மீட்டுத் தருவார்
எங்கள்
இளையோர்...
அவன் ஊட்டிய
விடுதலை
உணர்வோடு!

அன்று
தெரிவான் பாரடா...
தெரிவான் பாரடா...
எம் தலைவன்
அந்த
முருகனைப் போன்ற
பொலிவோடு!

எதிரியின் கனவு
நீர்க்கோடு
அதை அழிப்போம்
அற மன்றத்
தீர்ப்போடு


தலைவன்
எங்கள் மூச்சோடு
அவன்
மூட்டிய நெருப்பு
அணையா
விழிப்பில்
மீட்டு எடுப்போம்
தாய் நாடு!

அன்று
தெரிவான் பாரடா...
தெரிவான் பாரடா...
எம் தலைவன்
அந்த
முருகனைப் போன்ற
பொலிவோடு!

*நன்றி விகடன்.*

# வழித்துணையல்ல... வழி!

கவிஞர் பழனிபாரதி



கானுறை வேங்கையின்
கனலும் கண்களைப் பார்த்திருந்தால்ஞ்
சமாதானத்தின்
வெள்ளைச் சொற்கள் தீர்ந்து
பீரங்கியின் மேல் அமர்ந்திருக்கும்
புறாவின்
சிறகுகளைத் தடவிக் கொடுத்திருந்தால்ஞ்
நான் உங்களுக்கு
அந்தப் பெயரைச் சொல்லவேண்டியதில்லை

இன அழிப்புக்கு எதிரான
அந்தப் பெயர்
எங்களுக்கு ஓர் ஆயுதம்
அது எங்கள் படையெடுப்பு
அது எங்கள் மானங்காத்த சீருடை
அது எங்கள் காயம் ஆற்றிய சிகிச்சை

எம் பெண்களை
வன்புணர வருகின்றவர்களின்
வழியில்
அது ஒரு கண்ணிவெடியாக இருந்தது
எம் குழந்தைகளுக்கு
தாய்ப்பாலாகச் சுரந்தது

மாபெரும் மனிதச் சங்கிலியான
அந்தப் பெயர்
எங்களுக்கு ஒரு விதை
அது எங்கள் பசி
அது எங்கள் தாகம்
அது எங்கள் இரத்தம்
அது எங்கள் தழும்பு
அது எங்கள் புன்னகை

காற்றில்
தீச்சுடராய் அசையும்
காந்தள் மலரைத் தொட்டுப் பாருங்கள்
அந்தப் பெயரை
நீங்களும் சூடிக்கொள்வீர்கள்

உயிருருக்கும்
யாழிசையைக் கேட்டுப் பாருங்கள்
நீங்களும்
அந்தப் பெயரை
நீங்களும் பாடிச் செல்வீர்கள்

மனிதர்களுக்கு எதிரானவர்கள்
அந்தப் பெயரை
முள்ளிவாய்க்காலில்
புதைக்க நினைத்தார்கள் ஞ்
நந்திக் கடலில்
கரைக்க நினைத்தார்கள்ஞ்

அது
எங்கள் கைகளைப் பிடித்துக்கொண்டு
அழைத்துச் செல்லத் தொடங்கிவிட்டது

அந்தப் பெயர்
எங்கள் வழித்துணையல்ல
வழியே அதுதான்.

# பாதுகாப்பையும் இறைமையையும் பங்கமின்றிப் பாதுகாத்தல்

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**

வட மாகாண முதலமைச்சர்


தமிழ் நாட்டில் இருந்த சூழலில் வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பங்கேற்கும் நிகழ்வு செய்தி அறிந்து சென்று பார்த்தேன். வடமாகாண முதலமைச்சரின் பேச்சையும் கேட்டேன். அவர் சொற்பொழிவின் கருத்தை நாம் புரிந்துக்கொள்ளும் வகையில் அச்சொற்பொழிவின் முழுவடிவத்தையும் தமிழர் தகவல் இதழில் வெளியிட்டுள்ளேன்.

என் அன்புள்ள தமிழ்ப் பேசும் பாரத நாட்டுச் சகோதர சகோதரிகளே,

ஆங்கிலத்தில் பேசினால் மட்டும் போதாது எங்கள் தாய் மொழியிலும் நீங்கள் பேசவேண்டும் என்றார்கள் கூட்ட அமைப்பாளர்கள். இன்று ஆங்கிலத்தில் நான் பேசியதைத் தமிழாக்கம் செய்யப்போவதாக அறிவித்திருக்கின்றபடியால் உங்கள் அயல்நாட்டுத் தமிழர் அவையில் அன்றாடம் நடப்பதை அல்லது நடக்காதிருப்பதை அண்ணளவாவது அலசி ஆராய்ந்தால் என்ன என்று எனக்குப் பட்டது. அங்கு நடப்பது பற்றி சற்று நேரத்திற்கு முன் என் ஆங்கிலப் பேச்சிலும் குறிப்பிட்டிருந்தேன்.

அதாவது தனக்கென மட்டும் அன்றி இலங்கைவாழ் வடகிழக்குத் தமிழ்ப் பேசும் மக்கள் சார்பாகவும் 1987ம் ஆண்டின் இலங்கை ‍ இந்திய உடன்படிக்கையில் பாரதம் கையெழுத்திட்டது. 13வது திருத்தச் சட்டம் என்பது இந்தியாவால் தமிழர் சார்பில் எடுத்துரைத்த விடயங்களுக்கு இலங்கை அரசாங்கம் கையளித்த ஒரு முழுமையற்ற தீர்வாவணம். உடன்படிக்கையை எக்காரணம் கொண்டும் விரைவில் முடித்துவிடவேண்டும் என்று அக்கால இருநாட்டு முதல்வர்களும் முடிவெடுத்திருந்ததால் 13வது திருத்தச் சட்டம் முக்கியமான அதிகாரங்களை நியாயமான முறையில் மத்திக்கும் மாகாணத்திற்கும் இடையில் பகிர்ந்து கொடுத்துள்ளதா என்ற கேள்விக்கு விடை தேடாமலேயே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

மற்றவற்றைப் பிறிதொரு ஆவணத்தில் எம் உள்@ரில் பதிய உடன்பாடு ஏற்பட்டது. அவ்வாறு கொண்டுவந்த சட்டந்தான் மாகாண சபைகள் சட்டமாகும். உண்மையில் பாரதத்தின் எதிர்பார்ப்பு ஒன்றாய் இருக்க இலங்கை அரசாங்கம் கொடுத்த பதில் யாப்புத் திருத்தமும்




அதையொட்டிய மாகாணசபைகள் சட்டமும் ஒருகையால் கொடுத்த அதிகாரங்களை மறுகையால் திரும்ப எடுப்பது போல் அமைந்திருந்தன.

அதாவது ஆளுநரின் குறுக்கீட்டுக்கு ஆனவழிதேடி ஆவணம் அமைத்து, தந்ததைப் பறிக்க அரசியல் சதி செய்யப்பட்டது. முழுநாட்டுக்கும் ஏற்புடைத்தான இச்சட்டம் தெற்கில் உள்ளவர்களுக்குப் பெரிய பிரச்சனையாக அமையவில்லை. காரணம் அவர்கள் யாவரும் ஒரே இனத்தவர்கள். பெரும்பாலும் ஒரே கட்சியினர், ஒரே மொழியினர். எம்மையோ இச்சட்டம் பலவிதங்களில் பாதித்தது. இது பற்றி ஏற்கனவே எமது தமிழ்த்தலைவர்கள் தெரிந்து கொண்டு 13வது திருத்தச் சட்டம் ஜனனமான காலத்திலேயே நடக்கப் போவதைத் தீர்க்க தரிசனத்துடன் எடுத்தியம்பியிருந்தனர். பிரதமர் இராஜீவ்காந்தி அவர்களுக்கு எமது தமிழ்த் தலைவர்கள் 1987ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28ந் திகதி எழுதி அனுப்பிய கடிதத்தில் இத்தீர்க்க தரிசன கருத்துக்கள் இடம்பெற்றன.

வடக்கையும் கிழக்கையும் பிரிப்பார்கள் தென்னவர்கள் என்றார்கள். அது நடந்தது. மாகாண அதிகாரங்களை வலுவற்றதாக்க வழி ஏற்படுத்தப்படும் என்றார்கள். அது நடந்தது. சடங்கு ரீதியான பதவியில் இருத்தப்படும் ஆளுநர் அச்சட்டத்தை வைத்தே சபைகளின் அதிகாரங்களைத் தனதாக்கிக் குறுக்கிட நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றார்கள். அதுவும் நடக்கின்றது. எதுவுமே இல்லை இந்த 13வது திருத்தச் சட்டத்தில் என்றார்கள். அதைத்தான் நாங்கள் தேர்தல் காலத்திலும் கூறினோம். இப்பொழுதும் கூறி வருகின்றோம்.

ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் கீழ் உண்மையான அதிகாரப் பகிர்வை எதிர்பார்க்க முடியாது என்பது தான் நாம் முக்கியமாகக் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியதொன்றாகும். ஒற்றையாட்சியின் ஒரேயொரு அதிகார மையம் இதுதான் என்று எமது அரசியல் யாப்பு மத்தியையே சுட்டிக் காட்டுகின்றது. மத்தி மனமுவந்து அதிகாரங்களைப் பகிர முன் வந்தால்த் தான் மாகாணங்கள் தம் மக்கள் நலனுக்காகப் பாடுபடலாம். வடமாகாண இனப்பரம்பலையே மாற்றியமைத்துப் பெரும்பான்மையினரை உள்நுழைத்து, கிழக்கு மாகாணம் போல் பெரும்பான்மையினரை வடக்கிலும் பெருவாரியாகக் குடியிருத்த இராணுவ மூலமாக நடவடிக்கை எடுத்து வரும் மத்திய அரசாங்கம் மனமுவந்து எமக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அது தான் தற்போதைய நிலை. எல்லா விதத்திலும் எம்மை இயங்கவிடாது தடுப்பதே அரசாங்கத்தின் குறிக்கோளாக இருக்கின்றது.

அதிகாரம் இல்லாத வடமாகாண சபைக்கு ஏன் நீங்கள் தெரிவானீர்கள் என்று கேட்பீர்கள். நியாயமான கேள்வி அது. முன்னர் இதேபோல் கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நாங்கள் பகிஷ்கரித்ததால் அரசாங்கத்தின் கையோங்கி தமிழ்ப்பேசும் பிரதேசமான கிழக்கு மாகாணம் பாரிய சிங்கள ஊடுறுவல்களுடன் தற்பொழுது காட்சி அளிக்கின்றது. நாம் சுதந்திரம் பெற முன் *5* சதவிகிதத்திற்குங் குறைய இருந்த கிழக்கு மாகாண சிங்கள மக்களின் விகிதாசாரம்



தற்பொழுது 30 சதவிகிதத்தைத் தாண்டி விட்டது. கிட்டத்தட்ட 35 சதவிகிதமாக இருக்கின்றது. முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் அரசாங்கத்துடன் சேர்ந்து இருப்பதால் கிழக்குமாகாண முதலமைச்சர் முஸ்லிமாகவும், அவைத் தலைவர் சிங்களவராகவும் எதிர்க்கட்சித் தலைவர் தமிழராகவும் இருக்கின்றார்கள்.

இதே நிலை வடமாகாணத்தைப் பாதிக்கக் கூடாது என்பதாலேயே வலுவற்ற, வெறிதான 13வது திருத்தச் சட்டத்தின் கீழும் நாம் தேர்தலில் முன்னிற்க முடிவெடுத்தோம். பலவிதங்களில் அது நன்மை பயந்துள்ளது. வெளிநாட்டுப் பணத்தில் பாரிய தெருக்களைப் போட்டு, இந்திய அரசாங்கத்தின் பணத்தில் புகையிரத வழிபாதைகள் அமைத்து, சர்வதேச நிறுவன உதவியுடன் கட்டிடங்கள் கட்டி வடக்கில் வசந்தத்தை ஏற்படுத்தி விட்டோம் என்ற அரசாங்கத்திற்கு எம் மக்கள் தக்க பாடம் புகட்டினார்கள் தேர்தலின் போது. 38 ஆசனங்களில் எமது கட்சி 30ஐக் கைப்பாற்றியது. எனவே மக்களின் மனோநிலை இத்தேர்தல் ஊடாக உலகத்திற்குத் தெரியவந்துள்ளது. தாம் நினைத்தவாறு ஆடி வந்த பாரிய இராணுவத்தின் பிரசன்னம் ஓரளவுக்குக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கப்படுகின்றது. அப்படியிருந்தும் சிங்கள மக்களைத் தெற்கில் இருந்து கொண்டு வந்து வடமாகாணத்தில் குடியேற்ற அரசாங்கம் சகல நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளது. இராணுவத்தினருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றது. தமிழ்ப் பேசும் மக்களின் அரசாங்க அதிபர்களாக சிங்களவர்களை நியமித்துள்ளார்கள். எனினும் எமது சொற்ப அதிகாரங்களைப் பாவித்து பல கேள்விகளைக் கேட்டு அவர்களின் சிங்கள மயமாக்கல் பயணத்திற்கு முட்டுக்கட்டைகளை இட்டே வருகின்றோம்.

ஆனால் எமது பிரதம செயலாளர் அரசாங்கத்தின் கைப்பொம்மையாக செயல்ப்பட்டு ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழ் கருமங்கள் ஆற்றுவதால் எமக்கு கிடைக்க வேண்டிய அதிகாரங்களையும் நாம் பறிகொடுத்த நிலையில்த்தான் வாழ்கின்றோம். எமது வடமாகாண சபையின் நாளாந்த நடவடிக்கைகளில் நாம் எதிர்நோக்கும் சில விடயங்களை அடுத்துப் பட்டியல் இட்டுக் காட்டுகின்றேன். அவையாவன :

1. பிரதம செயலாளர் முதலமைச்சரின் கட்டளைகளை ஏற்க வேண்டியதில்லை என்ற அடிப்படையில் மாகாண நிதிச்செயற்பாடுகளை நிர்வகிக்கும் அதிகாரம் முதலமைச்சரிடமிருந்து விலக்கப்பட்டுள்ளது.

2. மாகாண அமைச்சரவையின் எல்லாத் தீர்மானங்களும் பிரதம செயலாளர் மற்றும் ஆளுநரின் அனுமதியுடனேயே செயற்படுத்த முடியும் என்பதோடு இவர்கள் இருவரும் மத்திய அரசின் பிரதிநிதிகளாக இருப்பதால் மத்தியின் அரசியல் விருப்புக்கு மாறான விடயங்கள் அமுல்ப்படுத்தப்பட முடியாமல் இருக்கின்றது.

3. மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மாகாண நிர்வாகத்துடன் எந்த வகையிலும் இணைந்து செயற்படாமல் மத்தியின் நிர்வாகத்தையும் மாகாண நிரல் கடமைகளையும் நிறைவேற்றி வருகின்றனர். முக்கியமாகக் காணி சம்பந்தமான கடமைகள் இவற்றுள் அடங்குவன.

4. ஆளனி விடயங்களில் ஆளுநருக்கு வழக்கப்பட்டுள்ள நியமனம், பதவி உயர்வு, ஒழுக்காற்று அதிகாரத்தின் மூலம் ஆளனியினரை மாகாண அரசு தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கு சுதந்திரமாகப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

5. நாம் செய்ய எத்தனிக்கும் விடயங்கள் மத்திய அரசில் உள்ள அரசியல் கட்சிகளின் விருப்புக்கு மாறான

விடயங்களாக இருந்தால் மாகாண அரச அலுவலர்களைக் கொண்டு நாங்கள் அவற்றைச் செயற்படுத்தப் புகும்போது பிரதம செயலாளர் மற்றும் ஆளுனரின் அச்சுறுத்தல் மூலம் அவை தடை செய்யப்படுகின்றன.

6. மத்தியின் ஆளுங்கட்சி மற்றும் அதன் பிரதேச தலைவர்களின் முகவராக ஆளுநர் செயற்படுவதால் அவருக்கு அஞ்சி மாகாண அரசின் கடமைகளை எமது அலுவலர்கள் நிறைவேற்ற முடியாமல் தத்தளிக்கின்றனர்.

7. அத்துடன் மாகாண அலுவலர்கள் நேரடியாக ஆளுநரின் பணிப்புரைகளைச் செயற்படுத்த வேண்டியுள்ள ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

8. மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு ஆளுநரின் அறிவுறுத்தலுக்கேற்ப மத்திய அரசின் விருப்பு வெறுப்புக்களுக்கமையவே செயற்படுகின்றது. மாகாண அரசுக்கு வேண்டிய நியமனங்களை மேற்கொண்டு நடத்தல், மத்திய அமைச்சுக்களின் கட்டளைகளை சிரமேற்கொள்ளல் போன்றவை எமக்கு பலத்த பலவீனத்தை ஏற்படுத்தியுள்ளது.

9. நியதிச்சட்டங்களை அனுமதிப்பதில் ஏனைய மாகாணங்களில் இல்லாத கட்டுப்பாடுகளை ஆளுநர் எம் மாகாணத்தில் பிரயோகித்து வருகிறார். உதாரணத்திற்கு அண்மையில் வடமாகாண முதலமைச்சர் தமக்கென உத்தியோகப+ர்வமான நிதியம் ஒன்றைத் திறக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. வடமாகாண சபைக்கென ஒரு நிதியம் இருக்கின்றது. அது பிரதம செயலாளர் கட்டுப்பாட்டில் இயங்குகின்றது.

அதை விட்டு முதலமைச்சர் நிதியம் ஒன்றை அமைக்க நாங்கள் முற்பட்ட போது அது நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய மாகாணங்கள் நான்கில் அப்பேர்ப்பட்ட நிதியங்களைத் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது பற்றி ஜனாதிபதியிடம் இந்திய உயர் ஸ்தானிகரால் அண்மையில் வினவப்பட்டது. அதற்கு அவர் அளித்த மறுமொழி நாங்கள் பதவிக்கு வரமுன்னர் திறக்கப்பட்டவையே அந்த நிதியங்கள். நாங்கள் வந்த பின் அப்பேர்ப்பட்ட நிதியங்களைத் திறக்க நாங்கள் இடமளிக்கவில்லை. திறக்க விடவும் மாட்டோம் என்றாராம்.

இதிலிருந்து இன்றைய மத்திய அரசாங்கத்தின் மனோநிலையை நீங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர்கள். அதே மனோநிலையால்த் தான் புலிவரப்போகிறது புலிவரப்போகிறது என்று கூறி சுமார் 1 லு இலட்சம் படையினர் வடமாகாணத்தில் குவித்து வைக்கப்பட்டுள்ளார்கள். கிராம மக்களின் அன்றாட வாழ்க்கையில் எல்லா விதத்திலும் அவர்கள் உள்ளிடுகின்றார்கள். பெண்களின் கதி பெருத்த சங்கடமாக உள்ளது. எமது காணிகளை இராணுவத்தினர் கையேற்று அவற்றைப் பயிரிட்டு அறுவடை செய்து எமக்கே விற்கும் ஒரு நிலை தான் தற்போது நடைபெறுகின்றது. தெற்கில் இருந்து சிங்கள மீனவர்கள் வந்து படையினரின் உதவியுடன் தடுக்கப்பட்ட மீன்பிடி முறைகளில் ஈடுபடுகின்றார்கள். எம்மவர் அவற்றில் ஈடுபட்டால் பிடித்தடைக்கின்றார்கள்.

மற்ற காணிகளை விட ஒரேயொரு இடத்தில் மாத்திரம், அதாவது வலிகாமம் பிரதேசத்தில் இராணுவம் 6000க்கு மேற்பட்ட காணிகளைச் சுவீகரித்து தாம் நினைத்தவாறு பலாத்காரமாக அங்கு இருந்த குடியிருப்புக்களை, கல்லூரிகளை, கோயில்களை அழித்து பாரிய வாஸஸ்தலங்களையும், கொல்வ் விளையாட்டுத் திடல்களையும், நீச்சல் தடாகங்களையும் கட்டி வருகின்றனர். அங்கிருந்த மக்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, வாழ வழியின்றி எமது அனுதாபங்களில் காலத்தைக்

கடத்தி வருகின்றார்கள் தற்காலிகத் தங்குமிடங்களில். இது அவர்களின் பாதிப்புக்கு மேலதிகமாக சமூக, கலாசாரச் சீரழிவுகளையும் ஏற்படுத்தி வருகின்றது.

இவ்வாறு எமது நிலையை அடுக்கிக்கொண்டே போகலாம். எமது கருத்துக்களை வெளிப்படுத்தும் போது பலவிதமான கட்டுப்பாடுகளை நாம் உபயோகித்தே பேசவேண்டியுள்ளது. உண்மைகளை உள்ளூரில் கூறினால் உனக்கும் புலிகளுக்குந் தொடர்புண்டு என்று கூறி விசாரணைக்கு அழைத்துச் செல்கின்றார்கள்.

சட்டப்படி பாரிய குற்றங்களை இழைத்த முன்னைய இயக்கத் தலைவர்கள் பலர் அரசாங்க விருந்தாளிகளாக இருந்து சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். சிறிய குற்றங்களில் ஈடுபட்ட இளவயது எம்மக்கள் பலர் எத்தனையோ வருடங்கள் சிறைகளில் வாடி வாழ்கின்றார்கள். மிகவும் மனவேதனையுடன் காலத்தைப் போக்கி வருகின்றனர். அவர்களை வெளியில் எடுக்க நாம் எடுத்த பிரயத்தனங்கள் யாவும் பலன் அற்றுப் போயுள்ளன.

வரப்போகும் தேர்தலில் எம்மிடம் யார் தானும் வாக்களிக்குமாறு உதவி கேட்கும் நிலை ஏற்பட்டால் பல கோரிக்கைகளை முன்வைத்து அவற்றைச் செய்யுமாறு கேட்கவிருக்கின்றோம். எமது சிறையில் வாடும் இளைஞர் யுவதிகளை அப்பொழுதேனும் நாங்கள் விடுவிக்கலாமா என்று பார்ப்போம்.

மேலும் சில விடயங்களை இத்தருணத்தில் உங்கள் முன்னிலையில் கூறிவைப்பது உசிதம் என்று கருதுகின்றேன். 30,40 வருடங்களுக்கு முன்னர் அனுமதிப் பத்திரம் பெற்று போரின் போது அப்பத்திரங்களைத் தொலைத்து காணிகளில் இருந்து வெளியேறி இப்பொழுது தமது காணிகளுக்கு சென்றவர்கள் அங்கு வேறு நபர்கள் இருப்பதைக் காண்கின்றார்கள். கேட்டால் உங்களிடம் பத்திரங்கள் இல்லை. இவை அரச காணிகள். நாங்கள் திரும்பவும் அவற்றைக் கையேற்று வேறு நபர்களுக்குக் கொடுத்து விட்டோம் என்கிறார்கள்.

அநேகமாக இங்கு வந்து அகதிகளாக இருப்போர் எம் நாடு திரும்பினால் அவர்கள் கதியும் இவ்வாறே அமையப்போகின்றது. எனவே அவர்களைத் திருப்பி அழைத்து புதிய இடங்களில் குடியிருத்த இந்திய அரசாங்கம் எமக்கு உதவ வேண்டும்.

மேலும் போரினால் பாதிக்கப்பட்ட வலுவற்றவர்கள், மாற்று வலுவுடையவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் என்று 18000ற்கும் மேலானவர்கள் இருக்கின்றார்கள். ஒரு இலட்சத்திற்குக் கிட்டிய தொகையினரான இளம் விதவைகள் இருக்கின்றார்கள். தாய் தந்தையரை இழந்த அநாதைக் குழந்தைகள் இருக்கின்றார்கள். வேலையற்ற இளைஞர் யுவதிகள் பலர் சில தொழில்களுக்குத் தகைமை இருந்தும், தரம் இருந்தும் தவித்து வாழ்ந்து வருகின்றார்கள்.

இன்னுமொரு பிரச்சனை உண்டு. தொழிற்திறம் எம்மக்களிடையே குன்றியுள்ளதால் தெற்கில் இருந்து கொத்தன்மார் போன்றவர்களை வரவழைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

மக்களின் மனோநிலை போரினால் பாதிக்கப்பட்டுள்ளது. அதனைப் போக்க வேண்டிய வைத்திய வசதிகள் ஆலோசனை கூறும் வசதிகள் எம்மிடம் இல்லை.

குழந்தைகளின் போஷாக்கின்மை மற்றொரு விடயம்.

இவற்றுடன் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழான வீடுகள் தேவையானவர்களுக்குக் கிடைக்காது அரசியல் சகாயம் பெற்றவர்களுக்குக் கிடைத்து வருகின்றது. தேர்ந்தெடுக்கும் முறை, தேர்ந்தெடுப்போர், வீட்டைக் கட்ட உதவும் பணம் யாவையும் நாம் வர முன் தீர்மானிக்கப்பட்டவை.

இத்திட்டமானது மக்களுக்கு நன்மை பயக்க இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்டது. ஆனால் ஊழல்கள் மலிந்து காணப்படுகிறது. இவற்றை நாம் எமது இந்தியத் தூதரகத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

இவை பற்றிப் பேசுவதற்காக நான் வரவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்னர் தான் தமிழில் பேசவேண்டும் என்றார்கள். மனதில் உள்ளதை உங்கள் முன் கொட்டித் தீர்க்கின்றேன். இதுவரை காலமும் இந்திய அரசாங்கமும் தமிழ் நாட்டின் அரசாங்கங்களும் தமிழ்மக்களின் தலைவர்களும் எமக்கு அளித்து வந்திருக்கும் உதவிகள் எமது மனமார்ந்த ஆழ்ந்த நன்றிக்கு உரித்துடையன. ஒருஇலட்சத்திற்கும் மேலான மக்களை பார்த்து பராமரித்து வந்ததை பாராட்டுக்குரியது. எமது மனபூர்வமான நன்றியறிதல்களை இது சார்பாக தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஆனால் நாங்கள் இங்கு பேசும் பேச்சுக்கள், உங்கள் கேள்விகளுக்கு நாங்கள் இறுக்கும் பதில்கள் எம்மை மட்டும் அல்ல எமது வடமாகாண சபையையும் பாதிக்கக் கூடும் என்பதை இங்கிருக்கும் நீங்கள் மறக்கக் கூடாது. அதாவது உணர்ச்சிபூர்வமான எமது பேச்சுக்களை வைத்து எமக்குப் பயங்கரவாத பூச்சைப் பூசி எமது வடமாகாண சபையைக் கலைக்கவும் தயங்காது எமது மத்திய அரசாங்கம். ஒன்றரை இலட்சம் படை வீரர்கள் முகாம் இட்டிருக்கும் இடத்தில் அவர்களை பாதிக்கும் கருத்துக்களை நாம் எடுத்தியம்பும் போது மிக்க கவனம் அவசியம். நிதானம் அவசியம். அந்த நிதானத்தை வைத்து நாம் கையாலாகாதவர்கள் என்ற கருத்தைப் பரப்பி வராதீர்கள். சூழலுக்கு ஏற்பச் சூள் உரைப்பதே இன்றைய சூழலில் சூரத்தனம். இல்லை என்றால் சுத்த முட்டாள் என்று பட்டம் கட்டி விடுவார்கள்.

இறுதியாக நீங்கள் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி ஒரு சில வார்த்தைகள். உங்கள் உணர்ச்சிகளை நாம் புரியாதவர்கள் அல்ல. நான் அவ்வாறு புரியாத ஒருவன் என்ற மாயையைப் பத்திரிகைகள் சில ஏற்படுத்தியுள்ளதை நான் அறிவேன். ஆனால் எமக்குத் தற்போது வேண்டியது உணர்சிகள் அல்ல. உதவிகள் கூட அல்ல. அதற்காக நான் உதவி வேண்டாம் என்று கூறியதாக நினைக்க வேண்டாம். உரிய சட்ட மாற்றமே முக்கியம். தற்போதைய அரசியல் யாப்பின் கீழ் 13வது திருத்தச் சட்டமானது மேலும் திருத்தியமைக்கப்பட்டாலும் அது எமக்கு நன்மை பயக்காது. யாப்பின் அடிப்படை ஒற்றையாட்சியில் இருந்து மாற்றப்பட வேண்டும்.

எமது தனித்துவத்தை, சுயநிர்ணய உரிமையை உள்ளடக்கியதாக அரசியல் யாப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதனைக் கோர, கொண்டுவர இந்திய அரசாங்கத்திற்குத் தார்மீக உரித்து உள்ளது என்பதைக் கூறி வைக்கின்றேன். எம் சார்பிலுந் தான் நீங்கள் 1987ம் ஆண்டின் உடன்பாட்டில் கையெழுத்திட்டீர்கள் என்பதை மறவாதீர்கள். நீங்கள் எதிர்பார்த்தவாறு எமது நிலைமை அமையவில்லையானால் எம் சார்பில் குரல் எழுப்ப உங்கள் நாட்டிற்கு உரிமையுண்டு. எமக்குப் போதிய உரித்தளிக்க எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யுமாறு நீங்கள் வலியுறுத்த வேண்டும். வடகிழக்கு மாகாண மக்களிடையே கருத்துக்கணிப்பு நடைபெற வேண்டும் என்பது அந்த உடன்பாட்டின் உள்ளடக்கம். அதை உங்கள் அரசாங்கம் நடத்துமாறு கேட்கலாம். எமது நாளாந்த வாழ்க்கையை மற்றவர்களின் உள்ளீடல்கள் இன்றி நாம் வாழ இந்திய அரசாங்கம் நடவடிக்கைகளில் இறங்கலாம் என்று கூறி என்னைத் தமிழில் பேச வழிவகுத்த மக்கள் ஒன்றியத்தாருக்கு நன்றி கூறி அமர்கின்றேன்.

நன்றி

வணக்கம்

# ஆனந்த சங்கரிக்கு ஏன் இந்த வேலை?

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை, ஐரோப்பிய யூனியன் அண்மையில் நீக்கியிருப்பதை அனைவரும் அறிவோம். அதை முன் உதாரணமாகக் காட்டி, இந்தியாவிலும் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்க வேண்டும் என்னும் குரல்கள் வலுவாக ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றன. இந்நிலையில், ஈழத்தில் இருந்து ஒரு துரோகக் குரல் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. 'ஐரோப்பிய யூனியன் தடையை நீக்கியது, மீண்டும் புலிகள் இயக்கம் உருவாக வாய்ப்பளிப்பதாக அமைந்து விடும்' என்று ஆனந்த சங்கரி என்பவர் கூறியிருக்கிறார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி காலத்திலேயே, ஈழ விடுதலைப் போராட்டத்தில், துரோக வரலாற்றைத் தொடங்கியவர் ஆனந்த சங்கரி. அவருடைய இனத் துரோகச் செயல், தந்தை செல்வா காலம் தொடங்கி, தேசியத் தலைவர் பிரபாகரன் காலம் வரைவில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

உலகில் வேறு எந்தப் போராளி இயக்கங்களும் புலிகள் இயக்கத்தின் அளவுக்கு இராணுவ ஒழுங்குடன் போராடியவை அல்ல. இயக்கத்தின் ஒழுங்கும் சரி, இயக்க உறுப்பினர்களின் தனி மனித ஒழுங்கும் சரி, விடுதலைப் போராட்டத்தின் ஓர் ஆயுதமாகவே தலைவர் பிரபாகரனால் முன்வைக்கப்பட்டன. ஒருபோதும் புலிகளின் ஆயுதங்கள், சிங்கள பொதுமக்களை நோக்கித் திரும்பியதே இல்லை என்பதை உலகமறியும். அத்தகைய இயக்கம், உலக நாடுகளின் தவறான கற்பிதங்களால், பயங்கரவாத இயக்கம் என்று சொல்லி தடை செய்யப்பட்டது. இன்று அந்தத் தடை ஒரு பகுதியில் நீக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பிற நாடுகளிலும் புலிகள் இயக்கத்தின் மீதான தடை நீக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

ஈழத் தமிழினத்தைக் கருவறுக்கத் துடித்துக் கொண்டிருக்கும், இனப் பகைவன் இராஜபக்சேவோடு ஒப்பிடத்தக்கவர், இனத் துரோகியான ஆனந்த சங்கரி. இன்று ஈழ விடுதலைப் போராட்டம் பின்னடைவைச் சந்தித்திருப்பதற்கு, ஆனந்த சங்கரி போன்ற, கோடரிக் காம்புகளே முக்கியக் காரணம். இவர்களைப் போன்ற, இன நலனுக்குக் கேடு நினைக்கும் புல்லுறுவிகளை ஈழத் தமிழர்கள் அடையாளம் கண்டு, முற்றுமாகப் புறக்கணிக்க வேண்டும்.

# ராஜபக்ஷேவுக்கு வாழ்த்து தெரிவித்த நரேந்திர மோடிக்கு கலைஞர் கண்டனம்

கடுமையாகக் கண்டனம் தெரிவிக்கப்பட வேண்டிய ஒன்று. ஏற்கனவே தமிழகத்தைச் சேர்ந்த வேறு சில எதிர்க் கட்சிகள் இதைக் கண்டித்து அறிக்கை விடுத்திருக்கிறார்கள். ராஜபக்ஷே எப்படிப்பட்ட இனப் படுகொலைக் குற்றவாளி என்பதை ஐ.நா. சபை வரை விவாதம் நடத்திக் கொண்டிருக்கிறது. அவரே திரும்பப் பதவிக்கு வர வேண்டுமென்பது, அரசு அலுவலகங்களில் குற்றவாளியின் படத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதைப் போலவும், ராஜபக்ஷே புரிந்த போர்க்குற்றங்களையும், மனித உரிமை மீறல் களையும் ஆதரிப்பது போலவும்தான் இருக்கும்!

# சமயம், ஜோதிடம் இவை இரண்டும் சரிவர நிர்ணயம் செய்வது வாக்கிய பஞ்சாங்கம்




எங்களுக்கு கிடைத்த தகவலின்படி இந்த கடிதக் கட்டுரையை வெளியிடுகிறோம். மாற்று கருத்து உள்ள அன்பர்கள் தெளிவான விளக்கங்களுடன் பதில் அளித்தால் அதை தமிழர் தகவல் இதழில் வெளியிட தயாராக உள்ளோம்.

மெய்ஞானத்திற்கு ஈடாக உலகில் எதுவுமே கிடையாது பிறந்து இறக்கும் மனிதப் பிறப்பு ஒரு வரையறைக்குள்ளே மட்டும்தான் சிந்திக்க முடியும் இயற்கையை மனிதனால் வெல்ல முடியாது. நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்கின்ற பஞ்சபூதங்களின் சீற்றம், இன்றும் மனிதர்களை காவுகொண்டேதான் இருக்கின்றது. நமது முன்னோர்கள் தமது தவவலிமை ஞானத்தால் கண்டு கொண்டே விடயங்கள் நம் புராணங்கள் கூறிய விடயங்கள் இன்று நாம் எமது கண்முன்னே கான்கின்றோம். எம்முன்னோர்கள் அனுபவித்து சொன்ன விடயங்கள். நாம் சந்கேமாக பார்த்தோம். இன்று விஞ்ஞானம் எனும் விடய மூலமாக அவை வருகின்ற போது அனுபவிக்கின்றோம். இதுதான் மனித மனம்.

ஒரு குறிகிய வட்டத்திற்கு வாழுகின்ற நாம். எமது சமய விழுமியங்கள் விடயதானங்களை, வியாபாரமாக்கி செயற்படுகின்ற நிலையே மேலோங்கி இருக்கின்றது. "கீரைக்கடைக்கும் எதிர்கடைவேண்டும் என்பது மனித வாழ்வின் நடைமுறைப்போட்டி அதுவே எமது சமய விழுமியங்களுக்கும் வருகின்றபோது, எம்மை நாமே தலைகுனிந்து கொள்ள வேண்டிய நலையாகின்றது. ஐந்து கோயில்களோடு இருந்த இலண்டன் மாநகரில் இன்று முப்பத்திற்கும் மேற்பட்ட ஆலயங்கள் என்பது பலரும் பெருமைப்பட்டு கொள்கின்றார்களே தவிர ஒரு முழுமையான ஆலயமாக ஆகம மரபுப்படியானபூஜை வழிபாடுகள் நடைபெறுவது இன்று இரண்டு ஆலயங்கள் மட்டுமே காரணம் சமயத்திற்கும், அதன் தாற்பரியத்திற்கும், தகுதியும் சம்பந்தமும், இல்லாதவர்களே இன்று ஆலயங்களின்


நிர்வாகிகளாக இருக்கின்றார்கள். அதற்கு மேலாக புதுவிதமான பூஜைமுறைகளை கண்டுபிடித்து செய்வதில் குருமார்கள் முட்டிமோதி நிற்கின்றார்கள், ஒருசிலர் வழிபடவரும், அடியார்களை கொண்டே சர்ப்பதோஷ அபிஷேகம் செய்விக்கின்றார்கள், (இதெல்லாம் எந்த ஆகமத்தில் கூறப்பட்டு இருக்கிறது) எங்கள் கையினாலே அபிசேகம் செய்கின்றோம் என்று அப்பாவி பக்தர்கள் பாவ முட்டையை இன்னும் வாங்கிக்கொள்கின்றனர். ஆகமம், ஜோதிடம், பஞ்சாங்க அறிவு, எதுவுமே இல்லாத நிலையில் இன்று இலண்டனில் எமது சமயம், சீர்குலைகின்றது. தவறுகளை எந்தக் குருக்களும் சுட்டிக்காட்ட முன்வருவதில்லை காரணம், சமயத்தைவிட அவரின குடும்பம் வருமானம் இதுவே அவருக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது.

இலங்கையிலும், இந்தியாவிலும், ஆலயங்களில் விரதநிர்ணய விடயதானங்கள், காலங்காலமாக இன்று வரை வாக்கிய பஞ் சாங்க நிர்ணயமே, கைக் கொள்ளப்பட்டு வருகின்றது, இலங்கையில் யாழ்ப்பாணம் இரகுநாத ஐயர் வாக்கிய பஞ்சாங்கம், இந்தியாவில் அர்ச்சகர்க சங்க அறுட்டான வாக்கிய பஞ்சாகம், காரணம், வாக்கியம் என்றால் "சொல்லப்பட்டவை" எமது சமய முனிசீரேஸ்டர்களின் 18 வகையான வாக்கிய கணித சித்தார்த்தம் கூறியிருக்கின்றார்கள்,




இவை விரத நிர்ணயங்களுக்கும், ஜோதிட பலாபலன்களுக்கும், மிகவும் சரியாக அமைகின்றன. சமய குரவர்கள் பாடிய திருப்பதிகளில் நவக்கிரஹங்கள் ஒன்பது என்றே பாடியிருக்கின்றார்கள். ஞாயிறு, திங்கள் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, பாம்பு இரண்டு ராகுகேது என்று ஞானசம்பந்தப்பெருமாள் தெளிவாக கூறியிருக்கின்றார். இந்த ஒன்பது கிரஹங்களும்தான், எமது 27 நட்சத்திரங்களுக்கும், 12 ராசிகளுக்கும் அதிபதியாக அமைகின்றன, இந்த ஒன்பது கிரஹங்களுக்கும் தான், மஹாதிசைகளும்., வகுக்கப்பட்டு இருக்கின்றன. "திருக்கணித பஞ்சாங்கம்" சமய ரீதியில் இருந்து விடுபட்ட இன்னும் இரண்டு விஞ் ஞானக்கிரஹங்களை சேர்த்துக்கொண்டு யுரேனஸ் நெப்டியூன் அம் சமயத்தை கோவிக்கிடமாக்கி வியாபாரம் செய்கின்றது, இந்த இருகிரஹங்களுக்கும், மஹாதிசை உண்டா? அல்லது ராசி நிலை ஆதிபத்தியம் உண்டா? இரண்டுமே கிடையாது அதைவிட இந்த கிரஹங்களுக்கு ஆலயங்களில் வழிபாடுதான் உண்டு விஞ்ஞானிகள் கண்டு பிடிக்கும் கிரஹங்களுகுகும் எமக்கும் என்ன சம்பந்தம், முன்பு புளுட்டோ எனும் கிரஹம் உண்டு எனக் கூறிய விஞ் ஞானிகள் இப்போது அதை இல்லை என மறுக்கின்றார்கள். இதுதான் விஞ் ஞானிகளின் நிலை.

இன்று இலண்டனில் ஒன்றியக் கோவில்கள் அனைத்தும், இந்த திருக்கனித பஞ்சாங்கத்தை பின்பற்றி எமது சமய அறுட்டானங்களை தவறான வழியில், செயல்படுத்தி மக்களையும் சஞ் சலப்பட வைக்கின்றார்கள். கடந்த பத்து ஆண்டுகளாகவே இந்த இலண்டன் கணிப்பு எனும் ஏமாற்றுவேலை நடைபெறுகின்றது அதற்கு முன்பு இலண்டன் வாழ்ந்தவர்கள் அனைவரும் இலங்கையன் வினோத தின நிகழ்வுகளையே அனுசரித்து செயற்பட்டனர். இந்த வெளிநாட்டு



நேரக்கணிப்பு பஞ்சாங்கம், அமெரிக்கா கனடா ஆகிய இருநாடுகளுக்குமே சாத்தியமான ஒன்று என்பது ஜோதிடம் அறிந்தவர்கள் நன்கு அறிவார்கள் முன்பு 70ம் 80ம் ஆண்டுகளில் இலண்டனில் பிறந்த குழந்தைக்கு அதே இலண்டன் நேரத்தற்குத்தான் எம் ஜோதிடர்கள், ஜாதகம் கணித்தார்கள், வாக்கிய பஞ்சாங்க கணிப்பை மையமாக வைத்து, 5.30 மணி நேர வித்தியாசம் கொண்ட இலங்கை லண்டன் கனிப்பு முழுமையான பஞ் சாங்க மரபுக் கணிப்புக்கு ஏற்புடையாத அமையாது என்பது ஜோதிட அறிஞர்கள் நன்கு அறிவார்கள், 60 நாழிகை என கூறப்படும் 24 மணித்தியாலத்தில் 21 நாழிகை எனப்படும். 11மணி நேர வித்தியாசம் உள்ள நாட்டிற்கு பஞ்சாங்கக் கணிப்பு சரியாக அமையும் உதாரணம் கனடா, அமெரிக்கா, 10.30 மணிநேர வித்தியாசம் இது ஏற்புடைய கணிதமாகவும் விரத குழப்பங்கள் ஏற்படாத கணிப்பாகவும் அமையும் இலண்டன் கணிப்பு என்பது வியாபாரதந்திரம் மக்களை எமாற்றும் வேலை இது புரியாத பக்தர்கள் அப்பாவிகள்.

புரிந்த குருமாரும், நிர்வாகிகளும் வியாபாரத்தந்திரங்களின் இந்தியாவில் எப்பவோ அப்போதுதான் இங்கு விரதங்கள், பண்டிகைகள், என்கின்ற ஈஸ்ஹாம் முருகன் கோயில், போன்ற ஒருசில ஆலயங்களின் நடைமுறை முற்றிலும் சரியானதே, இதை வாசிக்கும் ஒன்றிய ஆலயங்கள் கோபப்பட்டாலும் உண்மையை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும், இனிவரும் காலங்களில் ஆவது, நீங்கள் இந்தத்தவறுக்கு இடம்தராது சமயப்பஞ்சாங்கம் எனப்படும் வாக்கிய பஞ்சாங்க கணிதத்தை ஆலயங்களில் நடைமுறைப்படுத்தி செயற்படுங்கள் இதுவே எதிர்கால சந்ததிக்கு சரியான நம்பிக்கை தருவதாய் அமையும், எதிர்வரும் 15.12.2014 திங்கட்கிழமை சனிப்பெயர்ச்சி ஹோம பூஜை இந்தியாவின் திருநல்லாறு சனீஸ்வரன் கோயில் முதலாக இலங்கை இந்திய அனைத்து ஆலயங்களிலும் நடை பெறுகின்றது. இங்கு லண்டன் ஒன்றியக் கோயில்களில் சனிப்பெயர்ச்சி முடிந்துவிட்டது. இதுமிகவும் வேடிக்கையாக இருக்கின்றது, இதை எங்குபோய் சொல்லமுடியும்.

இவ்வண்ணம்

இலண்டன் வாழ் ஒரு சமயநலன் விரும்பி

கரவை மு.தயாளன் அவர்கள் தமிழர் தகவல் இதழில் எழுதிவரும் 'சில மனிதர்களும் சில நியாயங்களும்' தொடர்கதை தனி நூலாக திருமுருகன் வெளியீடாக வெளிவர உள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

# இறுகப்பிடித்துக்கொண்டால் இனிக்கும் உறவுகள்

வித்யாசாகர்

கைகளிரண்டும் உடைந்திருக்கையில் பறக்க இரு சிறகு கிடைத்ததற்குச் சமமானது உறவினர் உடனிருப்பது. மேலானதும் போதாதுமாய் இருக்குமந்த உறவுகள்; இருக்கிறார்கள் என்பதே பலம். சிரிக்கையில் சிரிக்கவும் அழுகையில் துடைக்கவும் உடனிருக்கும் உறவுகளின் கைகள் மகத்தானது. கசங்கிப்போன மலர்களின் வாசம்போல உதவிக்கில்லாதபோதும் உறவுகள் இருக்கிறார்கள் என்பது இனிக்கவே செய்கிறது. முரசடிக்கும் கைகள்ஓய்ந்து போனாலும் அடுத்தடுத்து உயிருள்ள கடைசி நொடியிலும் கொட்டும் முரசொலி சப்தம் காதுகளை எட்டித் தொடுவதைப்போல், உறவுகளின் பங்கில் ஒரு புள்ளியேனும் நம் மனதை எட்டி தொட்டுக்கொண்டேதானிருக்கிறது. பச்சைவயலின் ஈரமும் பரந்த வானின் நீளமும் கொண்டு அகன்றிருக்கும் மனசு உறவுகள் சிலரிடத்தில் வெகுவாக இருப்பது நமக்கான நம்பிக்கை கூடுவதன் உச்சமன்றி வேறில்லை.

எனக்கு நீ உனக்கு நான் என்று வாழ்வது; இலை வேருக்கு வெளிச்சம் பாய்ச்சுவதும், வேர் இலைக்கு நீர் பாய்ச்சுவதும்போன்ற இயல்பின் நிறைவன்றி வேறென்ன? காற்றிற்குப் பாகுபாடில்லை, நதி யாரைக் கண்டும் கோபத்தில் நின்றுக்கொள்ளப் போவதில்லை, அலைகள் உதைப்பவரின் காலைக் கூட நனைத்துத் தான் விலகிச் செல்கிறது; பின் மனிதன் மட்டும் தனக்கென வாழ்ந்து தனக்கென்று சாகையில், எந்த புதிய புல்முளைத்து 'மனிதரை' நீ மேலானவனாக வாழ்ந்தாயடா என்றுக் காட்டிவிடப் போகிறது?

சார்ந்திருத்தல், சாய்ந்துக்கொள்ளல், தாங்கிப்பிடித்தல், வாகைசேர்த்தல், வாலிபத் திமிரையும் வாஞ்சை மனதையும் விதைகளாக்கி வருங்காலத்திற்கு விட்டுச் செல்லல்போன்ற நிறைவுகளை மனிதன் வாழையடி வாழையாகப்பெற மனிதருக்கு அன்பின் நெருக்கமும் அதைப் பெருக்கும் உறவுகளின் ஈர்ப்பும் ஒருவருக்கு ஒருவரென அனைவருக்குமே வேண்டும்.

தனித்து அழும் கண்ணீரைப்போல சேர்ந்துமகிழும் கனமும் மனதிற்கு இனிப்பானதென உணர உறவுகளுடன் சேர்ந்திருந்துப் பார்த்தல்வேண்டும். நெருங்கி நிற்கையில் சிலவேளை குழப்பங்கள் நேரிடலாம், பிடித்தங்கள் மாறுபடலாம், முரண்படுகையில் கோபம் வரும் சண்டை மூளலாம், உனக்கா எனக்கா என்று சுயநலத்தில் மார்புதட்டி இருவேறாகக் குடும்பம் வெட்டி முறியலாம், முறியட்டுமே. முறிந்து, பின் புரிந்து, அன்பின் ஏக்கத்தில் மீண்டும் சேர்ந்து அணைக்கையில் கூடும் சுகம் பிரிந்திருப்பதில் இல்லையே.

பிறருக்குக் காட்டாத பூரிப்பு, பகிர்ந்துகொள்ளாத வெற்றி, வெளியில் தெரியாத வீரம் ஒருவருக்குள் ஒருவருக்காக மட்டும் வலுத்தென்ன பயன்? இருக்கும் உணர்வை சலிப்பு காட்டி, சிரிப்பு கூட்டி, மலிய மலிய' கொடுத்துக் கொடுத்து மீளும்' ஆனந்தக் கண்ணீர் ததும்ப தெரியும் முகம்' மானுட நீதியை மனிதத்துள் பொத்திக்காக்க ஒற்றுமையின் வழிநின்று முயற்சிக்கும் இக்காலத் தேவையறிந்த முகமன்றி வேறென்ன..?

வெவ்வேறு பக்கமாக மாறி மாறி வேறு பக்கம் திருப்புகையிலும்

வாழ்க்கை வேறுவேறாகத் தெரிகிறது. வெவ்வேறு வண்ணமும் எண்ணமுமாக நாளும் பொழுதும் நொடிக்குநொடி மாறிக்கொண்டே இருக்கிறது. இதில் தனியே நின்று செய்துமுடித்தவை செய்தவையாகவே முடிகிறது, சுற்றத்தோடு அறிந்துச் செய்யப்பட்டவையே சாதித்ததாகிறது. காரணம், மகிழ்ச்சி என்பது பகிர்தலில் இருக்கிறது. சிரியோருக்கு கொடுப்பதிலும், பெரியவரிடமிருந்து பெறுவதிலும் இருக்கிறது மகிழ்ச்சி.

நண்பரொருவர் கார் வாங்கினார். வீட்டிற்குப் போனதும் எப்போதும் போல தனது அறைக்குப் போனார் உடை மாற்றிக்கொண்டு படுக்கச் சென்றுவிட்டார். யாரோ ஒருவர் விவரமறிந்து தொலைபேசியில் அழைத்து ''என்னப்பா கார் வாங்கியிருக்கியாம், சொல்லவேயில்லையே' என்கிறார் இமைகள் விரிய. அதற்கந்த நண்பன், இதில் உன்னிடம் சொல்வதற்கு என்ன இருக்கு, எனக்கு லோன் கிடைத்தது அதில் வாங்கினேன். நீயா பணத்தைக் கட்டப்போற மாசம் மாசம்" என்று கடுப்படிக்க அவர் எதிர்முனையில் டப்பென இணைப்பை துண்டித்தார்.

இன்னொரு நண்பருக்கு, கார் கிடைக்கிறது. வேலைசெய்யும் நிறுவனத்தில் கார் தருகிறார்கள். உபயோகித்த கார். அவர் வேகவேகமாக வீட்டிற்கு வருகிறார், வரும் வழியிலேயே தொலைபேசியில் அழைத்து தனது அம்மா அப்பா மனைவி குடும்பத்திற்கு சொல்லிவிடுகிறார். கார் வாசலில் வந்து நின்றதும் அம்மா ஓடிவந்து ஆரத்தி எடுக்கிறாள். நம் வீட்டிற்கு முதல் கார் வந்துவிட்டது என்று அண்ணன் தம்பிகள் எல்லாம் அவனை கொண்டாடுகிறார்கள். குழந்தைகள் காரில் ஏறி அமர்ந்து எட்டி எட்டி குதித்து ஆரவாரப் படுத்துகிறார்கள். அந்த நண்பன் உடனே குளித்துவிட்டு எல்லோரையும் அழைத்துக் கொண்டு கோவிலுக்குச் செல்கிறான். வரும் வழியில் நல்ல உணவகம் பார்த்து அரிய உணவுகளை வாங்கித்தந்து உண்டு மகிழ்சியை எல்லோரிடமும் பகிர்ந்துக்கொள்கிறான். அவனுடைய நண்பர்களில் ஓரிருவரும் உடன் கலந்துக்கொண்டு அவனோடு மகிழ்ச்சியில் பூரிக்கிறார்கள். வீட்டிடம் வண்டி வந்து நின்று எல்லோரும் இறங்கியதும், அக்கம்பக்கத்தினர் ஓடிவந்து மகிழ்ச்சியோடு விசாரிக்கிறார்கள். இடையே "அவர் என்ஜினியரா இருக்காறா(?) நான் ஏதோ சாதாரண வேலை செயறாரோன்னு நினச்சேன்' என்று பக்கத்து வீட்டுக் காரரின் மனைவி பேசி உசுப்பேத்திவிட, நண்பனின் மனைவி பெருமையோடு அவனைப் பார்க்கிறார்கள். அவன் அன்று படித்து பட்டம் வாங்கியதற்கான அத்தனை மதிப்பும் மகிழ்ச்சியும் இந்த ஒரு காரில் இன்று அவனுக்குக் கிடைக்கிறது.

இரண்டுப்பேருமே கார் வாங்கினார்கள். முதல் நண்பன் புதிதாக வாங்கினான். இரண்டாம் நண்பனுக்கு கம்பனி முன்பு பயனப்டுத்திய பழையக் காரையே தருகிறது. இதில் மகிழ்ச்சி யாருக்கு கிடைத்தது பார்த்தீர்களா? இது ஒரு மாயையான உலகம். மகிழ்ச்சியையும் வெற்றியையும் ஆடம்பரத்திலும் அடுத்தவரின் தோல்வியிலுமே வைத்திருக்கிறது இவ்வுலகம். தான் ஜெயிப்பது, தான் அடைவது மட்டுமே இங்கே கொண்டாடப் படுகிறது.

கொண்டாட்டம் என்பது ஒரு கை ஓசையல்ல, இரு கை நான்காகி நான்கு எட்டாக கொக்கரிக்கும் உறவுகளின் ஆர்ப்பரிப்போடு வருகிறது கொண்டாட்டம். தான் உண்டு உறங்கி எழுவதைவிட, உண்டோமா உறங்கினோமா என்று பார்த்து கவனித்து அன்பு செய்து அக்கறையோடு பரிமாறும் உணவிலும் உறக்கத்திலும் ஒரு இனிப்புண்டு. அந்த இனிப்பை அடைய உறவுகளோடு கூடி வாழுங்கள்.

தீபாவளிக்கு வெடிக்கும் பட்டாசும் பொங்கலுக்கு மெல்லும் கரும்பும் தனியே இருப்போருக்கு வீண்செலவாகவே கருதப்படுகிறது. உறவுகள் நெருங்கி இருக்கையில் தான், பண்டிகையும் விழாக்களும் கோலாகலப் படுகிறது. குழந்தைச் சிரிப்பதும், கிழவர் வாழ்த்தும், அம்மாப்பா ஆசிர்வதிப்பும், அக்கா தங்கை அண்ணன் தம்பிகளின் மகிழ்வும் மனதிற்கு நிறைவை தருவது முழ உண்மை. என்றாலும் உறவுகளைப் பிரிவது என்பது பெறு வலி' அன்றி வேறில்லை. எனக்கு ஊர் விட்டு வருகையில் எனது எதிர்வீட்டு மரத்தைப்

## நன்றி... நன்றி

கடந்த 12 வருடமாக தொடர்ந்து லண்டனில் வெளிவரும் தமிழர் சஞ்சிகை தமிழர் தகவலுக்கு நிதி உதவி அளித்தவர்களை நன்றியுடன் நினைக்கவேண்டிய நேரம் இது.

தமிழர் தகவலுக்கு அன்பளிப்பளித்தவர்கள்

| | |
|---|---|
| V.யோகநாதன் | 2000பவுண்ட் |
| துரைசிங்கம் நாதன் | 1000பவுண்ட் |
| Dr. S.சோமசேகரம் | 500பவுண்ட் |
| வசந்தன் AJ Video | 500பவுண்ட் |
| சக்திவேல் | 500பவுண்ட் |
| சிவதம்பு | 100பவுண்ட் |
| கணேசமூர்த்தி | 100பவுண்ட் |
| T. யோகநாதன் | 100பவுண்ட் |
| ஜெகதீஸ்வரம் பிள்ளை | 100பவுண்ட் |
| Dr. K.சிவகுமார் | 100பவுண்ட் |

## நம்பிக்கை முனை

அந்த மனிதரிடம் யாரேனும் தங்களுக்கு நேரத்தைச் சொல்ல வந்தால் போதும். "இப்படித்தான் ஒருத்தருக்கு என்னாச்சு" என்று ஆரம்பிப்பார், அவருடைய மனைவிக்கு பொறுக்கவில்லை. ஒரு நாள் கடிந்துகொண்டார் இவர் சொன்னார். "வருபவர்கள் தங்களுக்கு நேர்ந்ததுதான் உலகின் மிகப்பெரிய துன்பம் என எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அல்லது தங்களுக்கு மட்டுமே இப்படி நேர்ந்துவிட்டதாகக் கவலைப்படுகிறார்கள். எனவே நான் அந்த பிம்பத்தை உடைக்கிறேன். இதை விடவு பெரிய துன்பங்கள் பலருக்கும் நேர்ந்திருக்கின்றன என்பதே அவர்களை சகஜ நிலைக்குக் கொண்டுவரும் என்றார். நியாயம்தானே...

பிரிந்துவந்தால் கூட வலிக்கும்.

ஒவ்வொரு முறை ஊர் போகையிலும், வழியே நெடுகிலும் இருக்கும் மரம், மரத்திற்குமேல் தெரியும் வானம், வானத்தில் நகரும் மேகம், மேகமுரசிப் பெய்யும் மழை, மழையோடு ஆடும் மலர்கள், மலரில் சிறகடிக்கும் தேனீ, தேனீக்கள் தாண்டிப்போகும் காக்கை, காக்கையோடு சுற்றும், குருவி தலை அமர்ந்திருக்கும் கன்னுக்குட்டி என எல்லாமே ஊரில் பார்க்கையில் எத்தனை அழகோ அத்தனைக் கொடுமை அவைகளை விட்டு விலகிவருவதும்.

தோல் இறுக்கிக் கட்டிக்கொண்டு முத்தமிடும் குழந்தையை இறக்கிவிட்டுவிட்டு விமானம் ஏறுவது அத்தனை சுலபமல்ல. போகும் வழியெல்லாம் உயிரருக்கும் குழந்தையின் நினைவை பிரிந்துச்செல்லும் பெற்றோர் மட்டுமே அறிவர் அதை. எனவே ஒரு இதயத்தையும் பிரிவால் அறுக்காதீர்கள். உறவுகளோடு கூடி மகிழ்ந்திருங்கள். உறவுகளின் நெருக்கத்தில் வாழ்க்கை பலவாக மகிழ்வாக சிறகடிக்கட்டும். சின்ன இதயம் முழுதும் சிரிப்பு நல்லுறவுகளால் நிறையட்டும். உறவுகள் சிரித்துக்குலுங்கும் வீடு சொர்கமாகவே எல்லோருக்கும் வாய்க்கட்டும்..

வெற்றியின் அர்த்தம்; ஒருவர் தோற்பதென்பது மாறி, திறமையை அறிவதும் பகிர்வதுமாய் ஒரு சகோதரத்துவ பூமி எல்லோருக்குமாய் சமதர்மத்தில் உருவாகட்டும்..

கரவை மு. தயாளன்



# சில மனிதர்களும் சில நியாயங்களும்

இறுதி அத்தியாயத்தில் வந்து நிற்கிறோம். மகேந்திரத்தின் தீர்மானத்தில் யாரும் தலையிடவில்லை. அதே நேரம் மதிவதனியும் தன் கணவனுடன் செல்வதே சரி என்று முடிவு செய்திருந்தாள்.

தாசுக்கும் ஆரணிக்கும் திருமணம் இனிதே நடந்தது.

இவ்வளவு விடயங்களையும் நகர்த்திக் கொண்டு வந்த படகோட்டியான நான் சிறிது கதைக்க விரும்புகின்றேன். இது என்னுடைய நியாயங்களுக்கான பக்கமாகவும் இருக்கலாம்.

மகேந்திரம் என்கின்ற பாத்திரம் நாட்டில் போராட்டம் தொடங்கிய காலந்தொட்டு வாழ்ந்த ஒரு பாத்திரம். மற்றைய பாத்திரங்கள் புலத்தையும் புலம் பெயர்ந்த தேசத்தையும் சந்தித்த பாத்திரங்கள்.



இந்தப் பக்கங்கள் தேவையா என்று நினைக்கலாம். என்னுடைய பாத்திரங்களைப்பற்றி நான் கதைக்க வேண்டியது அவசியம் என்று நான் நினைக்கிறேன். ஜெயகாந்தன் நாவலுக்கு முன் நான்கு பக்கங்களை ஒதுக்குவார். நான் நாவல் முடிந்த பின்பே செய்கிறேன். நாவலின் ஒவ்வொரு பக்கங்களையும் பொறுமையோடு படித்த நீங்கள் இந்தப் பக்கங்களையும் பொறுமையோடு படிக்கும்படி அன்போடு வேண்டிக் கொள்கிறேன்.

சரவணன் தன் இளம் பராயத்தில் பிரச்சினைகளை அனுபவித்து நாட்டைவிட்டுப் புறப்பட்டவன்.

கல்பனா முள்ளிவாய்க்காலில் வாழ்ந்து தப்பிப்பிழைத்து வந்தவள். இங்கே காலத்தை அவ்வளவாக நான் கணக்கிலெடுக்கவில்லை. பாத்திரங்கள் வாழ்ந்த காலங்களை பகைப்புலமாகக் கூறியுள்ளேன். ஆனால் அந்தப் பகைப்புலங்களுக்குள் செல்லவில்லை. ஏனென்றால் ஒவ்வொரு பகைப்புலமும் பல நாவல்கள் எழுதக் கூடியளவுக்கு சம்பவங்களைக் கொண்டுள்ளன. அதே நேரம் அந்தப் பகைப்புலங்களுக்குள் நான் வாழ்ந்தவனுமல்ல. ஆதலால் தவறான தகவல்களை வழங்கக் கூடாது என்பதால் அவற்றை நான் ஆழமாகத் தொடவில்லை.



புலம் பெயர்ந்த சூழலை ஓரளவுக்கு வெளிக் கொணர்ந்துள்ளேன். கலாச்சார யுத்தமொன்றை நிகழ்த்திக் கொண்டிருக்கின்ற புலம் பெயர்ந்த மக்களின் தோல்விகளையும் வெற்றிகளையும் பாத்திரங்களினூடாக வெளிக் கொணர்ந்திருக்கிறேன்.

அறுபது வருடங்களாக விடுதலைக்கான யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கின்ற ஒரு இனம் கத்தியின்றி இரத்தமின்றி யுத்தத்தை ஆரம்பித்து பின்பு கத்தியோடு யுத்தத்தைச் செய்து பின்பு அதனை மௌனித்து ஏராளமான இழப்புகளைச் சந்தித்து தன்னிலை இழந்து தவித்துக் கொண்டிருக்கிறது.

இந்தச் சமூகத்தின் சில பாத்திரங்களை உங்கள் முன் உலவ விட்டிருக்கிறேன். என்னுடைய பாத்திரங்களை ரசிப்பதும் ஒதுக்குவதும் விமர்சிப்பதும் உங்கள் பணி.

சில பாத்திரங்கள் அளவுக்குமீறிக் கதைப்பதாக உங்களுக்குத் தோற்றலாம் ஆனால் இதுதான் யதார்த்தம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

சில முடிவுகளும் சம்பவங்களும் யதார்த்தத்துக்கு அப்பாற்பட்டதாகத் தோற்றலாம்.

ஆனால் சூழ் நிலையின் தேவை கருதியே புகுத்தப்பட்டுள்ளன.

வாழும் பாத்திரங்களைக் கதைமாந்தர்களாகக் கொள்ளும்போது ஒரு விதமான நெகிழ்வுத்தன்மை என்னையும்மீறி ஏற்பட்டதை பின்புணர்ந்தேன்.

எந்தவிதமான திருத்தமும் இல்லாமல் இருக்கட்டுமே என்று விட்டிருக்கிறேன்.

இவர்கள் உங்களில் ஒருவராக இருக்கலாம்.

அல்லது உங்களின் நண்பராக அல்லது உறவினராக இருக்கலாம்.

ஏன் நீங்களாகவே இருக்கலாம்.

இது என்னுடைய சமூகம் நான் வாழ்ந்த சமூகம் என்ற பற்றுணர்வில் ஆங்காங்கு பலவிடயங்களை அள்ளித் தெளித்திருக்கிறேன். சூடு பறக்கும் என் அபிப்பிராயங்களை சூடாகவே தந்திருக்கிறேன்.

மீண்டும் என்னுடைய அடுத்த ‘வேப்பமரங்கள்’ என்னும் நாவலோடு சந்திக்கிறேன்.

(முற்றும்)

# அறிவியல் பேசும் தமிழ் இலக்கியங்கள்

## நுணாவிலூர் கா. விசயரத்தினம் (இலண்டன்)

அறிவியல் என்பதற்கு விஞ்ஞானம், நுணங்கியல், இயல்நூல், ஆய்வுத்துறை, அறிவு, பொருளாய்வுத்துறை, புறநிலை ஆய்வுநூல், அறிவு பற்றிய துறை, பருப் பொருள்களை ஆயும் நூல் தொகுதி ஆகிய கருத்துக்கள் அகராதியை அலங்கரித்து நிற்கின்றன. மனித இனம், வாழ்வு, வளம், நலம், பண்பு, வசதிகள் யாவும் மேன்னிலையடைவதற்கு உறுதுணையாயிருப்பது உலகில் உலாவும் அறிவியலாகும். மண்ணியல், வானியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய பல துறைகள் அறிவியலில் அடங்கும். இவ்வாறான அறிவியலைப் பூமித் தாயின் மக்களில் ஒரு சிலர் அறிவியற் பூங்காவில் நுளைந்து தத்தமக்கான துறைகளில் ஆர்வங் கொண்டு உலக முன்னேற்றத்தில் உதவிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் சேவை மகேசன் சேவையாகும். இனி, பண்டைத் தமிழர்களின் பழமை வாய்ந்த அறிவியல் பற்றிய செய்திகள் பழந் தமிழ் இலக்கியங்களில் எவ்வாறு பேசப்படுகின்றன என்ற பாங்கினையும் காண்போம்.

### தொல்காப்பியம்

தொல்காப்பியம் இடைச் சங்க காலத்தில் எழுந்த முதல் இலக்கண, இலக்கிய நூலை யாத்த தொல்காப்பியர் (கி.மு. 711) இவ்வுலகத்தின் ஐம்பெரும் பூதங்களான சேர்க்கைத் தோற்றம் பற்றியும், உலகிலுள்ள ஆறறிவு உயிர்களின் வளர்ச்சி பற்றியும் ஆய்ந்து, தொகுத்து மரபியலில் சூத்திரம் அமைத்த சிறப்பினையும் காண்கின்றோம். மரபியலென்பது முன்னோர் சொல் வழக்கு, அன்றுதொட்டு வழிவழியாக வரும் பழக்க வழக்கங்கள் ஆகியவை பற்றிக் கூறப்படுவதாகும்.

*(1)* இவ்வுலகம் ஐம்பெரும் பூதங்களான நிலம், ஆகாயம், காற்று, தீ, நீர், என்பன கலந்ததொரு மயக்கமான சூழ்நிலையில் இவ்வுலகம் தோன்றிற்று என்பது ஓர் அறிவியல் உண்மையாகும். இவ்வுண்மையைத் தொல்காப்பியர் இற்றைக்கு இரண்டாயிரத்து எழுநூறு (2,700) ஆண்டுகளுக்கு முன்னால் பின்வரும் பாடல் வரிகளில் நிறுவியுள்ளமை போற்றற்குரியதாகும்.

**"நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்
திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்."**

– (தொல். பொருள். மரபியல் 635)

உலகமானது நிலம், தீ, நீர், வளி, விசும்பு ஆகிய ஐம்பெரும் பூதங்கலந்த மயக்கமாதலான், மேற்கூறப்பட்ட பொருள்களைத் திணையும் பாலும் வழுவுதல் இல்லாமல், திரிவுபடாத சொல்லோடு தழுவுதல் வேண்டும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். இவ்வண்ணம் தொல்காப்பியர் ஒரு விண்வெளி விஞ்ஞானியாய் நிலவெளி, விண்வெளி விஞ்ஞானம் பேசுவதையும் காண்கின்றோம்.

*(2)* புல், பூண்டு, செடி, கொடி, மரம் ஆகியவற்றிற்கு உயிர் இல்லை என்று கூறுவோர் பலர் இருந்த காலமது. இந்நிலையிற்றான் இந்தியத் தாவரவிஞ்ஞான மேதை ஜெகதீஸ் சந்திர போஸ் (கி.பி.30.11.1858 23.11.1937) அவர்கள் தாவரங்களுக்கு உயிர், உணர்வு, அறிவு என்பன உள்ளன என்பதை நிரூபித்துக் காட்டிப் பரிசும், பாராட்டும் பெற்றுக்கொண்டார். இதன்பின்புதான் மக்களும் அவைகளுக்கு உயிர் உண்டென்ற நிலைப்பாட்டுக்கு வந்தனர்.

ஆனால் இதற்கு இரண்டாயிரத்து எழுநூறு (2,700) ஆண்டுகளுக்கு முன்பாகவே தொல்காப்பியனார் தாவரத்தின் உயிர், உணர்வு, அறிவு பற்றியும், மற்றைய உயிரினங்களின் அறிவு, உணர்வு, உயிர் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறிச் சூத்திரங்கள் அமைத்துள்ளார். அதில் பின்வரும் சூத்திரத்தில் ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நான்கறிவுயிர், ஐந்தறிவுயிர், ஆறறிவுயிர் ஆகிய ஆறு வகையான உயிரினங்களில் உலகத்திலுள்ள எல்லா உயிரினங்களையும் அடக்கிக் காட்டப்பட்ட சீரினையும் காண்கின்றோம்.

**"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**
**இரண்டறி வதுவே அதனொடு நாவே**
**மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே**
**ஆறறி வதுவே அவற்றொடு மனமே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே."**

(பொருள். 571)

ஓரறிவு உயிராவது உடம்பினாலே அறிவது என்றும், ஈரறிவு உயிராவது உடம்பினாலும,; வாயினாலும் அறிவது என்றும், மூவறிவு உயிராவது உடம்பினாலும,; வாயினாலும், மூக்கினாலும் அறிவது என்றும், நாலறிவு உயிராவது உடம்பினாலும,; வாயினாலும், மூக்கினாலும், கண்ணினாலும் அறிவது என்றும், ஐந்தறிவு உயிரானது உடம்பினாலும், வாயினாலும், மூக்கினாலும், கண்ணினாலும், செவியினாலும் அறிவது என்றும், ஆறறிவு உயிராவது உடம்பினாலும், வாயினாலும், மூக்கினாலும், கண்ணினாலும், செவியினாலும், மனத்தினாலும் அறிவது என்றும் தொல்காப்பியர் கூறுகின்றார். இவ்வண்ணம் உயிர்கள் ஆறு வகை ஆயின.

மேலும் தொல்காப்பியர் ஓரறிவிலிருந்து ஆறறிவுக்குரிய உயிரினங்களின் பெயர்ப் பட்டியலையும் தனித்தனியே வகுத்துத் தந்துள்ள சூத்திரச் சிறப்பினையும் பார்ப்போம்.

*1. ஓரறிவு உயிர்கள்*
**"புல்லும் மரனும் ஓரறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."**
(பொருள். 572)

*2. ஈரறிவு உயிர்கள்*
**"நந்தும் முரளும் ஈரறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."**
(பொருள். 573)

*3. மூவறிவு உயிர்கள்*
**"சிதலும் எறும்பும் மூவறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."**
(பொருள். 574)

*4. நாலறிவு உயிர்கள்*
**"நண்டும் தும்பியும் நான்கறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."**
(பொருள். 575)

*5. ஐயறிவு உயிர்கள்*
**"மாவும் புள்ளும் ஐயறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."**
(பொருள். 576)

*6. ஆறறிவு உயிர்கள்*
**"மக்கள் தாமே ஆறறி வுயிரே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."**
(பொருள். 577)

புல், மரம், கொட்டி, தாமரை ஆகியவை ஓரறிவு உடையனவென்றும் நந்தும், முரளும், சங்கு, நத்தை, அலகு, நொள்ளை, சிப்பி, கிளிஞ் சில், ஏரல் என்பன ஈரறிவு உடையனவென்றும் சிதலும், எறும்பும், அட்டை முதலியன மூவறிவு உடையனவென்றும் நண்டு, தும்பி, ஞிமிறு, சுரும்பு போன்றவை நான்கு அறிவினை உடையனவென்றும் நாற்கால் விலங்குகள், பறவைகள், பாம்பு, மீன், முதலை, ஆமை என்பன ஐவகை அறிவினை உடையனவென்றும் மக்கள், தேவர், அசுரர், இயக்கர் முதலாயினார் ஆறறிவு உயிர்களென்றும் கூறி உலக உயிரனைத்தையும் ஆறு வகையில் அடக்கிக் காண்பித்தவர் தொல்காப்பியர். இவற்றை உற்று நோக்கின், தொல்காப்பியர் காலத்தில் தாவரவியல், உடற்கூற்றியல், பறவையியல், விலங்கியல் போன்ற அறிவியற் துறைகள் மேம்பட்டிருந்தமை புலனாகின்றது.

**புறநானூறு**

(1) கடைச் சங்க காலத்தில் எழுந்த எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றில் ஐம்பெரும் பூதங்களான நிலனையும், வானையும், காற்றையும்,

நெருப்பையும், நீரையும், உலகம் கொண்டுள்ளது என்று சங்ககாலப் புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர் ஓர் அறிவியற் பாடலைப் பாடியுள்ளார்.

**"மண் திணிந்த நிலனும்,**
**நிலம் ஏந்திய விசும்பும்,**
**விசும்பு தைவரு வளியும்,**
**வளித் தலைஇய தீயும்,**
**தீ முரணிய நீரும், என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்..."**

*(புறம். 2: 16)*

இதில் மண் செறிந்த நிலமும், நிலத்திலிருந்து ஆகாயமும், ஆகாயத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்த நீரும் உண்டாயின என்ற அறிவியல் பேசப்படுவதையும் காண்கின்றோம்.

(2) சங்க காலப் புலவரான உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்பவர் கீழ்க் காணும் புறநானூற்றுப் பாடலில் 'செஞ் ஞாயிற்றின் வீதியும், அஞ்ஞாயிற்றின் இயக்கமும், இயக்கத்தால் சூழப்படும் மண்டிலமும், காற்றுச் செல்லும் திசையும், ஆதாரமின்றி நிற்கும் வானமும், என்றிவற்றைச் தாமே அவ்விடஞ் சென்று அளந்து அறிந்தவரைப் போல, அவை இப்படிப்பட்டவை என உரைக்கும் அறிவுடையோரும் உளர்' என்று விண்ணியல் விஞ்ஞானம் விரிவாய்ப் பேசப்படும் இலக்கிய விந்தையைக் காண்கின்றோம்.

**"செஞ்ஞா யிற்றுச் செலவும்,**
**அஞ்ஞா யிற்றுப் பரிப்பும்,**
**பரிப்புச் சூழ்ந்த மண் டிலமும்,**
**வளி திரிதரு திசையும்,**
**வறிது நிலைஇய காயமும், என்றிவை**
**சென்றளந்து அறிந்தார் போல, என்றும்**
**இனைத்து என்போரும் உளரே..."**

*(புறம். 30: 17)*

**அகநானூறு**

கடைச் சங்க காலத்தில் எழுந்த எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான அகநானூற்றில் "தோழி வாழ்வாயாக! நான் கூறுவதையும் கேட்பாயாக! மழையானது பெய்யும் இடத்தை விட்டுச் சென்ற ஆகாயத்திலே, சிறுமுயலாகிய மறுவானது தன் மார்பகத்தே விளங்கச் சந்திரன் நிறைந்தவனாகி, உரோகிணி தன்னுடன் சேரும் இருளகன்ற நடு இரவில், அதாவது திருக்கார்த்திகைத் திருவிழா நாள் இரவில், வீதிகளிலே விளக்கு வைத்து, மாலைகள் தொங்கவிட்டுப் பழமையைத் தனக்குப் பெருமையாகவுடைய மூதூரில் பலருடன் ஒன்று கூடி விழாக் கொண்டாடுவார்கள்.." என்று சங்கப் புலவர் நக்கீரர் ஒரு சிறந்த பாடலைத் தந்துள்ளார்.

**"அம்ம வாழி, தோழி! கைம்மிகக்**


**.............................**

**மழைகால் நீங்கிய மாக விசும்பில்**
**குறுமுயல் மறுநிறம் கிளர, மதி நிறைந்து,**
**அறுமீன் சேறும் அகல்இருள் நடு நாள்:**
**மறுகுவிளக் குறுத்து, மாலை தூக்கிப்,**
**பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய**
**விழவுஉடன் அயர, வருகதில் அம்ம!**

**..................................................."**

*(அகம். 141: 1, 611)*

திருக்கார்த்திகைத் திருவிழாக் கொண்டாடும் வழக்கம் அன்றைய மக்கள் மத்தியில் நிறைந்திருப்பதை எம்மால் உணரமுடிகின்றது. சந்திரனும் கார்த்திகை நட்சத்திரமும் அண்மித்திருக்கும் நாளைத் திருக்கார்த்திகை நாள் என்று விழாவெடுத்துக் கொண்டாடினர். இதில், ஆகாயம், சந்திரன், உரோகிணி, திருக்கார்த்திகை என்று விண்வெளி அறிவியல் பேசப்படுவதையும் காண்கின்றோம்.



#### பதிற்றுப்பத்து

கடைச் சங்ககால எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பதிற்றுப்பத்தில் அறிவியல் பற்றிய செய்திகள் எவ்வண்ணம் பேசப்படுகின்றன என்பதையும் காண்போம்.

(1) நிலம், நீர், காற்று (வளி), வானம் (விசும்பு) ஆகிய நான்கினதும், விண்மீன்கள் (நாள்), கிரகங்கள் (கோள்), சந்திரன் (திங்கள்), சூரியன் (ஞாயிறு), பெருநெருப்பு (கணை அழல்) ஆகிய ஐந்தினதும் அளப்பரிய பேராற்றல்களைச் சங்கப் புலவர் குமட்டூர்க் கண்ணனார் சிறந்தொரு பாடலை இரண்டாம் பத்தில் தந்துள்ளார்.

**"நிலம், நீர், வளி, விசும்பு, என்ற நான்கின்**
**அளப்பு அரியையே;**
**நாள், கோள், திங்கள், ஞாயிறு, கனை அழல்**
**ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை;"**

*(14: 14)*

(2) இனி மூன்றாம் பத்தில் சங்கப் புலவரான பாலைக் கௌதமனார் பாடியுள்ள ஒரு சீரிய பாடலையும் பார்ப்போம். நீண்ட தொலைவிலுள்ள வானத்திலிருந்து ஒளிவிடும் மின்னல் வெளிச்சம் விண்ணிலும் மண்ணிலும் பரவி நிற்பதாகவும், நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களின் ஆற்றல் பற்றியும், ஒளி வீசிக் கொண்டு வானில் கதிரவன் சுடர்பரப்ப, அதற்குச் சற்று வடக்கேயுள்ள சிறப்புமிகு வெள்ளிக்கோள் என்னும் சுக்கிரன்,

பலன் தரும் மற்றக் கோள்நிலைகளும் பொருந்தி நிற்கையில் நல்ல மழை பொழியும் என்று கூறப்படுகின்றது.

**"நெடு வயின் ஒளிறு மின்னுப் பரந்தாங்கு**
**.....................................**
**நீர், நிலம், தீ, வளி, விசும்போடு, ஐந்தும்**
**...............................................**
**வயங்கு கதிர் விரிந்து வானகம் சுடர்வர,**
**வறிது வடக்கு இறைஞ்சிய சீர் சால் வெள்ளி**
**பயம் கெழு பொழுதோடு ஆநியம் நிற்ப,**
**கலிழும் கருவியொடு கை உற வணங்கி.."**

*(24: 1, 15, 2326)*

வெள்ளிக் கோள் வடக்கே தோன்றினால் நல்ல மழை பொழியும் என்பது ஒரு வழக்காகும். வானம், மின்னல், வெளிச்சம், விண், மண், நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம், கதிரவன், சுக்கிரன், மழை ஆகிய இயற்கை வளங்களைத் தொட்டுச் செல்லும் புலவர் ஆகாயத்தில் பறந்து திரியும் ஓர் அற்புதக் காட்சியை நம் முன் வைத்துச் சென்றுள்ளார்.

#### பரிபாடல்

கடைச் சங்கத்தில் எழுந்த எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பரிபாடலில் அறிவியல் பேசும் பாங்கினை நல்லெழுநியார் என்னும் புலவர் யாத்த ஒரு பாடலில் காண்போம். 'சுவைமை, இசைமை, தோற்றம், நாற்றம், ஊறு என்று உரைக்கப்படும் ஐந்தான அவையும் நீயே யாவாய்! இசைமை எனப்படும் முதலான ஓசையால் அறியப்படும் வானமும் நீயே! ஓசை, ஊறு என்னும் இரண்டானும் அறியப்படும் காற்றும் நீயே! ஓசை, ஊறு, ஒளி என்னும் மூன்றானும் உணரப்படும் தீயும் நீயே! ஓசை, ஊறு, ஒளி, சுவை என்னும் நான்கானும் உணரப்படும் நீரும் நீயே! ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐந்தானும் முற்ற உணரப்படும் நிலனும் நீயே! என்று திருமாலைப் போற்றுகின்றார்.

**"...............................................**
**சுவைமை இசைமை தோற்றம் நாற்றம் ஊறு**
**.....................................................**
**ஒன்றனிற் போற்றிய விசும்பும் நீயே!**
**இரண்டி னுணரும் வளியும் நீயே!**
**மூன்றி னுணரும் தீயும் நீயே!**
**நான்கி னுணரும் நீரும் நீயே!**
**ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே!......."**

*(பாடல் 13: 14, 1822)*

விசும்பும், வளியும், தீயும், நீரும், நிலமும் ஆகிய இயற்கையான ஐம்பொறிகளும் இங்கேயும் பேசப்படுகின்றன.

#### ஐங்குறுநூறு

இந்நூலின் பின்வரும் கடவுள் வாழ்த்தைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் எனும் கடைச் சங்கப் புலவர் பாடியுள்ளார்.

**"நீலமேனி வாலிழை பாகத்து**
**ஒருவன் இருதாள் நிழல்கீழ்**
**மூவகை உலகும் முகிழ்த்தன, முறையே."**

நீலநிற மேனியையும் தூய அணிகளையும் உடைய உமையவளைத் தன் உடலில் ஒரு பாகமாய்க் கொண்ட ஒப்பில்லாத சிவபெருமானின் இரண்டு திருவடிக் கீழ்

மூன்று வகைப்பட்ட உலகங்களும் நிலை பெற்றுள்ளன. மூவகையுலகு என்பது மேல், நடு, கீழ் என்பனவாம். அவைதான் விண், மண், பாதலம் ஆகும். பரம்பொருளிலிருந்து வானம் தோன்றியது, வானத்திலிருந்து காற்றுத் தோன்றியது. காற்றிலிருந்து தீ தோன்றியது. தீயிலிருந்து நீர் தோன்றியது. நீரிலிருந்து நிலம் தோன்றியது என்று சிலர் உரைப்பர். இங்கே ஐம்பூதங்களின் பரம்பொருளையும் காண்கின்றோம்.

**சிலப்பதிகாரம்**

சங்கம் மருவிய காலத்தில் எழுந்த ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் 'திங்களைப் போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்! மாமழை போற்றுதும்!' என்று பரந்த வானியல் பேசப்படுவதையும் காண்கின்றோம். இங்கே இயற்கையான சந்திரனையும், சூரியனையும், மாமழையையும் ஒரே நேரத்தில் ஏற்றிப் போற்றும் இலக்கிய மேதை இளங்கோவடிகள் விண்வெளி பேசும் விஞ்ஞானியாய் விண்ணில் பறந்து திரிவதையும் உற்று நோக்கிப் பார்க்கின் தெளிவாகும்.

**முடிவுரை**

இதுகாறும் தொல்காப்பியத்தில் நிலம், ஆகாயம், தீ, நீர், காற்று ஆகிய ஐம்பூதங்கள் பற்றியும், தாவரத்தின் உயிர், உணர்வு பற்றியும், மற்றைய உயிரினங்களின் அறிவு, உயிர், உணர்வு பற்றியும், ஓரறிவிலிருந்து ஆறறிவுள்ள உயிரினங்களின் பெயர்ப்பட்டியல் பற்றியும், புறநானூற்றில் நிலனையும், வானையும், காற்றையும், நெருப்பையும், நீரையும் உலகம் கொண்டுள்ளது பற்றியும், ஞாயிற்றின் வீதியும், இயக்கமும், இயக்கத்தால் சூழும் மண்டிலமும், காற்றுச் செல்லும் திசையும், ஆதாரமின்றி நிற்கும் வானம் ஆகியவை பற்றியும், அகநானூற்றில் ஆகாயம், சந்திரன், உரோகிணி, திருக்கார்த்திகை ஆகியவை பற்றியும், பதிற்றுப்பத்தில் விண்மீன்கள், கிரகங்கள், சந்திரன், ஞாயிறு, நெருப்பு மின்னல், வெள்ளிக்கோள் ஆகியவற்றின் ஆற்றல் பற்றியும், பரிபாடலில் சுவைமை, இசைமை, தோற்றம், நாற்றம், ஊறு என்பன பற்றியும், ஐங்குறுநூற்றில் விண், மண், பாதலம் ஆகிய மூவுலகு பற்றியும், சிலப்பதிகாரத்தில் சந்திரன், சூரியன், மாமழை என்று பரந்த வானியல் பற்றியும் பேசப்பட்டுள்ளதை மேலே பார்த்தோம்.

சங்க இலக்கியங்களில் இலக்கியம் மட்டும்தான் உள்ளது என்று கூறமுடியாது. அவற்றில் அறிவியல் சார்ந்த விடயங்களும் நிறைந்துள்ளன என்பதை மேற்காட்டிய எடுத்துக்காட்டுகளில் இருந்து புரிந்து கொள்ளலாம். உலகம் நவீனமயமடைந்த வண்ணமுள்ளது. எனவே அறிவியல் சார்ந்த கல்வி மிக முக்கியம் வேண்டற்பாலது. தனி இலக்கியங்களைவிட அறிவியல் சார்ந்த இலக்கியங்கள் மக்களுக்குப் பெரும் பயனை நல்கும்.

சில இலக்கியங்களில் அறிவியலும் கலந்திருப்பது உண்மை. இதற்கு மேற்காட்டிய நூல்கள் சான்றாகும். இவற்றை இலக்கியக் கண்கொண்டு படித்தால் இலக்கியம் முன்வந்து நிற்கும். அதை அறிவியற் கண்கொண்டு பார்த்தால் அறிவியல்தான் முந்திநிற்கும். எனவே இலக்கியமும், அறிவியலும் சமநிலையில் அமைவது சாலச் சிறந்ததாகும்.

காலத்தால் மூத்த இலக்கிய, இலக்கண நூலான தொல்காப்பியத்தில் அறிவியல் சார்ந்த செய்திகளையும் புகுத்தி முதற் காலடியெடுத்து வைத்த பெருமை தொல்காப்பியனாரைச் சாரும். இவரைத் தொடர்ந்து பின்னெழுந்த சங்க இலக்கிய நூல்களிலும் அறிவியற் செய்திகள் பரந்து செறிந்துள்ளதையும் காண்கின்றோம். அறிவியல் சார்ந்த இலக்கியங்களின் வாழ்நாள் மிக நீண்டதென்பதும் தெளிவாகின்றது. மேற் காட்டிய நூல்கள் இதற்குச் சான்று பகரும். எனவே அறிவியலை முன்னிலைப்படுத்தி அதனால் வரும் பயனை ஏற்று எம் வாழ்வியலை மேம்படுத்தத் திடசித்தம் கொள்வோமாக!

பாகம் 4

# கட்டடக்காடு

பசுந்திரா சசி

## 18 வருடத்தில் 867 குழந்தைகள்

அன்றும் அவள் பழம் புடுங்க வரவில்லை. ஏமாற்றத்தோடு கொட்டகைக்கு வந்த சீனு காட்டுவாசிகள் பற்றித் தெரிந்து கொள்ள அவர்களின் வாடிக்கு அருவில் இருந்த வனபாதுகாப்பு அதிகாரி வீரோ மற்றும் அவரின் சக நண்பர்கள் இருந்த வாடிக்கு வந்தான். முன்னதாக வீரோவிடம் வாங்கிய புத்தகம் இரண்டிற்குமாக நன்றி தெரிவித்தான். பின் அதன் மேலான ஐயங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

இறுதியாக பேரு நாட்டின் நாட்டு நடப்பு பற்றி பேசிக் கொண்டு இருந்த சமயம், "இந்த ஆதிவாசிகளின் ஆண், பெண் உறவு முறை பற்றி ஏதும் தெரிந்து வைத்திருக்கிறீர்களா?" என்று தன்னை அறியாமலே கேட்டுவிட்டான். வீரோ பிளாஸ்திரிக் கதிரையை எடுத்துக் கொண்டு அமைதியான காற்றோட்டமான வட்டக்கொட்டிலை நோக்கி நடந்தார்.

சீனு தன்னைத்தானே கடிந்து கொண்டான். இப்படி இவரிடம் கேட்டிருக்க வேண்டாம் என்று தோன்றியது அவனுக்கு. ஆனால் அவன் அறிவார்ந்த விடயங்களை அறிந்து கொள்ள வெட்கப்பட மாட்டான்.

அவன் பிறந்தது யாழ் தீபகற்பத்தில் உள்ள நெடுந்தீவு என்னும் பிரதேசமாயினும், சிறு பிராயத்திலேயே வவுனியா, செட்டிக்குளம் என்னும் பகுதிக்கு அவன் பெற்றோர் குடியேறிவிட்டனர். அவன் பள்ளிப்பருவம் செட்டிக்குளம் மகா வித்தியாலயத்திலேயே ஆரம்பித்தது. பின் கல்விப் பொதுத்தராதரச் சாதாரணதரம் அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலும், உயர்தரம் யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும், பின் பட்டப்படிப்பை யாழ் பல்கலைக்கழகத்திலும் பயின்றவன். பேச்சாற்றல் நன்றாக கைவரப் பெற்றவன். விழா மேடைகளில் பேசியதோடு சில சமயங்களில் நன்றாக வேண்டிக் கட்டிக் கொள்வதும் உண்டு.

ஒருமுறை கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து வந்திருந்த பேராசிரியர் இவனை அழைத்த சங்கடமான தலைப்பு ஒன்றைக் கொடுத்து கூச்சம், தயக்கம், ஆங்கில சொல் கலத்தல், குழூக்குறி (குறியீட்டு பதம்) போன்றவை ஏதும் இன்றிப் பேசுமாறு உயர் கல்வி கேட்போர் கூடத்தில் நிறைந்த மன்றில் முன்நிறுத்தி "சனத்தொகை பரம்பலில் ஆண்களின் உச்ச வரம்பு" என்ற தலைப்பில் செல்வன். பசுபதி சீனுசன் அவர்கள் பேசுவார் என்று கூறிவிட்டு அமர்ந்துவிட்டார்.

தன்னை மாட்டிவிடும் நோக்கமா, இல்லை பட்டை தீட்டும் நோக்கமா? இதில் எதுவாய் இருந்தாலும் எதிர்கொள்வது என்ற முடிவோடு ஆரம்பித்தான். முதலில் உடல் உறவு பற்றிச்பேச ஆரம்பித்தான்.

“அனுபவரீதியாக அல்ல அறிவார்ந்த ரீதியாக” என அவன் ஆரம்பித்த போது மண்டபம் சிரிப்பொலி கண்டது. இடையிடையே கூச்சலும் எழுந்தது. ஆனால் அவன் தொடர்ந்தான்.

“மகாத்மா காந்தி சத்திய சோதனை என்ற நூலில் ஆயுத பலத்தைக் கொண்டு உலகத்தையே வென்று விடுவதைவிட, உள்ளுக்குள் இருக்கும் காமக் குரோத உணர்ச்சிகளை வென்றுவிடுவது அதிக கஸ்டமாக எனக்குத் தோன்றுகின்றது. இதனால்தான் இவ்வுலக புகழ்ச்சி உரைகள் எனக்கு இன்பம் தருவதில்லை. அவற்றிற்குத் தகுதியானவனா நான் என்று மனக்கஸ்டமே உண்டாகிறது என்றார்” என்ற சீனு 868 குழந்தைகளுக்குத் தந்யையான (Mouly Ismail) ‘மௌலை ஸ்மைல்’ பற்றி பேசுகிறான். சிலர் முகம் சுழித்தனர். சிலர் தலையைக் கீழே போட்டுக் கொண்டு தாம் இதைக்கேட்கவில்லை எனக்காட்டி காதுகளை மட்டும் அகலத்திறந்து வைத்திருந்தனர். இன்னும் சிலர் குனிந்து பல்லைக் கடித்தவாறே கடைக்கண்ணால் சீனுவைப்பார்த்துப் பின், திடம் கொண்டு தலை நிமிர்ந்தனர். ஏன் மேடையில் இருந்த சிலர் கூட கண்ணால் சீவன்போன கட்டையைப் போல கண் அசைக்கவும் முடியாமல், எழுந்து வெளியே போகவும் முடியாமல் நகச்சாயத்தை சுரண்டியவாறு நாக்கு வறண்டு இருந்தனர். ஆனால் பலர் உற்சாகத்துடனேயே அவனை நோக்கியவாறு கேட்டுக் கொண்டு இருந்தனர். இது ஒன்றும் குசுனிக்குசுகுசுப்பு அல்ல. பாதி விளங்காமல் கேட்பவரும், கெதியா சொல்லிவிட்டு கொக்கட்டம் விட்டுச் சிரிக்கும் இடமல்ல இது. உயர்கல்விப் பீடக்கருத்தரங்கு காரண காரியம் இன்றி ஒருத்தரும் இங்கு பேச முடியாது. நேர்த்தியான வார்த்தைகளால் குனிந்த தலைகளையும் நிமிர வைத்துப்பேசிக் கொண்டிருந்தான் சீனு.

அந்த மொராக்கோ (Morocco) நாட்டு மன்னன் 18 வருடங்களில் மட்டும் 867 குழந்கைளுக்கு தந்தையாகி இருக்கின்றார். சராசரியாக அவர் ஒரு கிழமைக்கு ஒரு பிள்ளை வீதம் பெற்று இருக்கின்றார். ஆனாலும் அது அறிவியலின்படி சிறு எண்ணிக்கையே. பெருமகனாரின் சொற்றொடரான ‘ஆண்களின் உச்சவரம்பு’ இதுவல்ல. இங்கேதான் நாம் தாய்மையின் பெருமையைச் சிந்திக்க வேண்டும். பெண்கள் பக்கம் நமது பார்வையை திருப்ப வேண்டும்.

ஒரு வருடத்தில் அவர் 48 குழந்தைகளைப் பெற்றெடுக்க, ஒரு மனைவி ஒரு வருடத்தில் ஒரு குழந்தையே பெற்றெடுக்கின்றாள். இங்கேயும் பெற்றெடுக்கும் பெண்மையே கட்டுப்படுத்தும் பெரும் பணியையும் செய்கிறது. இவ்வாறு தொடர்ந்த சீனு அறிவுரையும் பேசினான். ஆண், பெண் இருபாலாரும் தெரிந்திருக்க வேண்டுமாயின் பெண்களின் இயல்பான சுபாவத்தினால் பெண்களுக்கே அதிகமாகத் தெரிந்திருக்க வேண்டிய ஒரு விடயம் இது. மாதத்தில் மூன்று நாட்கள் அதாவது 72 மணி நேரமே உயிர்வாழும் பெண்ணின் உயிரணுவின் காலப் பகுதியைச் சரியாகத் தெரிந்து வைத்திருந்து அக்காலப்பகுதியில் தனித்திருக்க முடியுமானால் அவர்களால் எத்தனை வருடங்களும் வேண்டாத கருத்தரித்தலை தவிர்க்க முடியும். இது ஒரு இயற்கையான கருத்தடை முறை. பக்கவிளைவுகள் இல்லாத ஒரு இலகுவான முறை. இதற்குத் தேவையானதெல்லாம் அறிவும் பொறுமையுமே. எமது ஆசிய நாடுகளில் முக்கியமாக நடுத்தர வயது குடும்பங்களில் இருசாரரும் கருத்தரித்தலை மையமாக வைத்து உடலுறவை தவிர்த்து வருவது சமூகத்தில் இழையோடி இருக்கும் ஒரு பெரும் பிரச்சனை. அழகிய இவ்வாழ்க்கை ஒருமுறைதான் – அதில் நிறைவாக வாழும் சந்தர்ப்பத்தை இழப்பதோடு, மன உளைச்சலையும் ஏற்படுத்துகிறது. குடும்பங்களுக்கு இடையில் நெருக்கம், அன்னியோன்னியம்

அருகிப்போகத் தர்க்கம் தலை எடுக்கிறது. அதுவே மறுபுறம் விவாகரத்துகளுக்கும வேண்டாத சமூகச் சீர்கேடுகளுக்கும் பல பாலியல் வக்கிரங்களுக்கும் மூலகாரணமாய் அமைந்து இறுதியில் கொலை, சிறை என முடிகிறது. குடு–இன்பம் என்பதே குடும்பம் என்ற வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவம் புரியாமல் பலரின் குடும்பங்கள் சின்னா பின்னமாகி வாடுகின்றது. 'நான் கேட்டுதாய், தந்தை படைத்தாரா? இல்லை என் பிள்ளை எனைக்கேட்டுப் பிறந்தானா?' என்ற கவிஞர் கண்ணதாசன் வரிகளை நாம் ஆழமாக நோக்கவேண்டும். பூமியின் வளங்களையும் எமது எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு நாம் இருவர், நமக்கேன் இன்னொருவர் என்றிருக்கும் ஜெர்மனியர்கள் போல் இல்லாமல், நாம் இருவர் நமக்கு ஒருவர் என்னும் சீனர்கள் போலும் இல்லாமல், நாம் இருவர் நமக்கு இருவர் என்று வாழ்வோம் எனக்கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்" என்று சீனு முடித்த போது – கரகோசம் காதைக் குடைந்தது.

ஆனால் அனுபவசாலியான வீரோவிடம் ஆண், பெண் உறவு முறை பற்றி கேட்ட போது எதுவும் பேசாது வெளியே சென்றுவிட்டார். அவனும் பின் தொடர்ந்தான். மிரோ நடுத்தர வயதுடைய நல்ல திடகாத்திரமான ஆறடி மனிதர். முடியை மேவிச்சீவி இருப்பார். எப்போதும் ஏதாவது செய்து கொண்டே இருப்பார். வயது ஏறக்குறைய *55* முதல் *60* வரை இருக்கும். நல்ல பண்புடைய மனிதர். எல்லாவற்றிற்கும் மேலாக உதவி செய்யும் மனப்பக்குவம் உடையவர். நிச்சயம் எனது கள்வியைப் புரிந்து கொள்வார் என எண்ணியவாறு அருகில் அமர்ந்தான்.




வீரோ ஆங்கிலத்தில் அமைதியான தொனியில் மனதின் ஆழத்தில் இருந்து பேசினார். "உலகிலே மிகப் பழைமை வாய்ந்த கட்டிடக்கலை என்ற வகையில் பிரான்ஸின் (BARNENEZ) பானனேஸ் கி.மு.*4800* ஆண்டு பழமை வாய்ந்தது. அதற்கு அடுத்த நிலையில் இருப்பது கி.மு *3500* ஆண்டு பழமை வாய்ந்த பேரு நாட்டுப்பொக்கிசமான செச்சின்பாயோ (சிபிணிமிழி ஙிகியிளி) ஆகும். ஆனால் பிரான்சின் வளர்ச்சி எங்கே? எமது நிலை எங்கே? இப்போது நீங்கள் செய்யும் இந்த ஆய்வின் முடிவில் மேலும் பல பேரு பற்றிய வியத்தகு உண்மைகள் தெரியவரும். ஆனாலும் இன்னமும் கற்கால காட்டு மனிதர்களையும் கொண்டதும் எமது நாடேதான்.

இதற்காக யாரை குற்றம் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இந்த மக்களையும் ஒரு கட்டமைப்புக்குள் கொண்டுவர பலர் முயன்றனர். அதில் பலர் பலியானதால் அம்முயற்சியைக் கைவிட்டு விட்டனர். அதன்பின் எமது அரசு அவர்களின் பிரதேசத்திற்குள் பிரவேசித்து அவர்களின் நிலங்களை அபகரிப்பதோ, அமைதியான வாழ்க்கையைக் குலைப்பதோ கடுமையான குற்றமாக அறிவித்து, ஒரு எல்லை வரைபை உருவாக்கி அவர்களைப் பேணி வருகின்றது.

அந்த எல்லை இங்கே இருந்து சுமார் 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. அதனைத் தாண்டி அவர்களும் வருவதில்லை. நாங்களும் அதற்குள் பிரவேசிப்பதில்லை. உலகில் காட்டில் வாழும் சனத்தொகையில் அரைவாசிக்கு மேல் பிரேசில், பேரு ஆகிய இரு நாட்டில் தான் வாழ்கிறார்கள். சிறுசிறு குழுக்களாக வாழும் அவர்களின் கூட்டத்திற்குக் கூட்டம் மொழி நடையில் சிறு வேறுபாடு இருந்தாலும் காலச்சொல், குணச்சொல், வினைச்சொல் போன்ற மூலச்சொற்கள் கச்சுவா மொழிநடையிலேயே இருக்கும். பல சமயங்களில் இடச்சொல், பெயர்ச்சொல் குழுவுக்குக் குழு வேறுபடும். உதாரணமாக ஒரே விலங்கை இருவேறு இடங்களில் வெவ்வேறு பெயரால் அழைப்பார்கள். ஆனால் வா, போ, சாப்பிடு போன்ற வினைச்சொற்கள் ஒரே வகையானதாகவே இருக்கும். இந்த மொழிக்கு எழுத்து வடிவம் கிடையாது. மனித கண்டுபிடிப்புகளில் முதன்மையானது மொழியே. அது எழுத்து வடிவம் பெறும் போதே செழுமை அடைகின்றது. மொழி இன்றிச் சிந்தனை இல்லை, சிந்தனை இன்றி முன்னேற்றம் இல்லை என்ற நிலையிலேயே அவர்கள் வாழ்வு குறுகியதாகி விடுகின்றது. இதோ இந்த இரு புத்தகங்களையும் படியுங்கள் பல விடயங்கள் புரியும்" என்று மேலும் இரு நூல்களை அவனிடம் கொடுத்தார்.

அதனை வேண்டிக் கொண்டு அவருக்கு நன்றி சொன்னான் சீனு. மேலும் இரவு உணவுக்கு எங்கள் வாடி வீட்டிற்கு வருமாறும் கேட்டுக்கொண்டான். அவர் தன்னுடன் சக நண்பர்கள் நால்வரும் வந்தால் உங்களால் சமாளிக்க முடியுமா எனச் சிரிப்போடு கேட்டார். நிச்சயமாக எனக் கூறிவிட்டு "சற்று இருங்கள். இதோ வருகிறேன்" என்று தனது இருப்பிடத்திற்குள் நுழைந்தவன்,

சமையல் கட்டில் நின்ற சித்திராவிடம் "சித்து, சித்து இங்க வாயேன்" என்றான்.



"என்னடா சீனு" என்றபடியே வந்தவளிடம்,

"இரவுச் சாப்பாட்டிற்கு நண்பர்கள் நாலு பேர் வருவீனம், செய்யிற சாப்பாட்டைக் கொஞ்சம் அதிகமாகவே செய் சித்து. உரைப்பு கம்மியாகவும், உருசி தூக்கலாகவும் இருக்கும்படி பார்த்துக்கொள்" என அவள் காதைக் கடித்துவிட்டு மீண்டும் வீரோவை நோக்கி நடந்தான் சீனு.

அவர் அருகில் அமர்ந்து "நீங்கள் விரும்பி இந்த வேலைக்கு வந்தீர்களா? இல்லை தகுதியின் அடிப்படையில் நியமிக்கப்பட்டீர்களா.... ?" என்றான் பணிவாக. "நான் முன்னர் கூறியது போல் எமது நாடு மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றது. பிரான்ஸ் நாட்டின் முன்னேற்றத்துடன் ஒப்பிடும் போது நாம் 10 சதவீதம் கூட இல்லை. வேலை வாய்ப்பு மிகவும் கடினம். நான்–லிமா மிருகக்காட்சிச் சாலையில் மிருகக் காப்பாளராகவே முதன் முதல் வேலைக்குச் சேர்ந்தேன். அங்கு சுற்றுலா பிரயாணிகளுக்கு மிருகங்கள் பற்றி அவ்வப்போது எடுத்து உரைப்பேன். பின் என் தந்தை என்னை பகுதி நேர ஆங்கில வகுப்புக்கு அனுப்பி வைத்தார். அதன்

பலனே நான் இன்று கல்வியாளனாக உங்களுக்கு நடுவில் ஆங்கிலம் பேசிக்கொண்டு இருக்கின்றேன். ஒருமுறை சிலந்திக் குரங்குக் குட்டி ஒன்று (SPIDER MONKEY) ஆற்றில் விழுந்து அடித்துச் செல்லப்பட்டு ஆற்றின் நடுவே ஒரு மரத்தில் இரண்டு நாட்களாக இருந்ததை அறிந்து நானும் சக ஊழியர்களும் அதை மீட்கப்போனபோது, வன இலாகா அதிகாரி ஒருவரின் தொடர்பு கிடைத்தது. அவர்களால் முடியாமல் போன காரியத்தை நான் கடுமையாகப் போராடி குட்டியுடன் கரை வந்ததைப் பாராட்டிய அந்த அதிகாரி என்னையும், தங்களுடன் இணையுமாறு கேட்டு, அதற்கான சிபாரிசுகளையும் செய்தார். பின் பயிற்சி வழங்கப்பட்டது. சில ஆண்டுகள் இப்பகுதியில் கடமையாற்றிய பின் கடந்த ஆண்டு முதல் இந்தப்பகுதிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டேன்" என்று தன் கதையைக் கூறி முடித்தார். அவனது சங்கடமான கேள்விக்கு விடை கிடைக்குமா? எனத் திகைத்தவனுக்கு அதற்கும் சுவாரசியமான பதில் கூறி அனுப்பினார். அவருக்கு நன்றி தெரிவித்து, விருந்தை மறந்து விடாதீர்கள் எனக் கூறிவிட்டு வீடு வந்தான். தன் வன மாதுவின் கதையை இவரிடம் சொல்லலாமா? வேண்டாமா? என்ற குழப்பம் ஒருபுறம் இருக்க, இப்போதைக்கு வேண்டாம். ஆனால் அப்படி சொல்லுவதாக இருந்தால் இவருக்குதான் முதலில் தெரிவிக்க வேண்டும் என்ற முடிவுடன் இருந்தான்.

அவர் சொன்ன காட்டுவாசிகளின் திருமண முறை அவனுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது அதே சமயம் கவலையையும் அவனுள் விதைத்தது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலையில் அவர்கள் நம்மைப் போல் மிகவும் தெளிவாகவே இருக்கிறார்கள். ஆனால் ஒத்த வயதினரை அவர்கள் திருமணம் செய்து வைப்பதில்லை. 45 வயது மதிக்கத்தக்க ஆணை 18 வயது பெண்ணுக்கும் அதேபோல் 20 வயதுப் பையனை 40 வயதுப் பெண்ணுக்கும் மணம் செய்து வைப்பார்களாம். காரணம் நம்மைப்போல் கல்வி முடித்து வேலை தேடிக் கொண்ட பின் திருமணம் செய்து கொள்வது போல் இல்லை, அவர்கள் வாழ்க்கை,

தனியாக குடும்பம் என்று போகும் போது இருவரில் ஒருவருக்காவது வேட்டையாடல், ஆபத்தான தருணங்களில் புத்திக்கூர்மையுடன் நடந்து கொள்ளல், நோய் வாய்ப்படும் போது அதற்கான மருத்துவ முறைகளைத் தெரிந்து வைத்திருத்தல் போன்ற காரணங்களுக்காகவே அவ்வாறு செய்கிறார்கள். அங்கே ஆண், பெண் இருவரும் சமம், வயதும் அனுபவமுமே அங்கு முக்கியம் பெறுகிறது.

நம் நாட்டில் போல் அல்லாமல் காட்டில் பருமனான பெண்களையோ, ஆண்களையோ பார்க்கவே முடியாது. விலங்குகளும் அவ்வாறே. ஆனால் நம் நாட்டில்தான் சோம்பேறிகளும், உடல்வாகு பெருத்தவர்களும் இன்னும் பாயாசத்தில் பருப்பு இல்லை என்பதும், பக்கத்து வீட்டில் பச்சைப்பிள்ளைக்கு பால் இல்லையென்பதும், பட்டுப்புடவையின் பளபளப்பு போதாது என்பதும், வீட்டு வேலைக்காரியின் பாவாடை உலர வைக்க ஒரு மேலாடை இல்லை என்பதும் இங்கேதான். இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம் என்ற அவரின் ஆதங்கத்தில் சீனுவை மிகவும் பாதித்தது ஆதிவாசிகளின் திருமண பந்தமுறை. ஒருவேளை அவர்கள் அவனை நிராகரித்துவிட்டால், அவளைவிட வயதாகி இருக்க வேண்டும். இல்லை வயதில் இளையவனாக இருக்க வேண்டும் என்று எண்ணியவாறே அன்றைய பொழுது கழிந்தது.


தொடரும்

# தமிழோடு இசைபாடல்

மார்கழி மாதம் வந்துவிட்டால் இசைவிழாவும் ஆரம்பமாகிவிடும். சென்னைக்கு இந்தியாவின் பல பாகங்களில் இருந்தும் இசைக் கலைஞர்கள் வந்து சேருவர். இப்போ, பல வெளிநாடுகளில் வாழும் கலைஞர்களும் வருகிறார்கள். இவர்களுடன் இசை இரசிகர்களும் வந்து கூடுவர். தமிழோ, தெலுங்கோ, கன்னடமோ, மலையாளமோ எந்த மொழியானாலும் கலைஞர்கள் சென்னவீயிலே வந்து பாடினால் மட்டுமே பெயர், புகழ் எல்லாம் வரும். இது ஓர் எழுதாத சட்டம்.

சங்கீத மும்மூர்த்திகள் என அழைக்கப்படும் தியாகராஜ சுவாமிகள், முத்துசுவாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகியோர் இறைவழிபாடாகவே பல கீர்த்தனைகளை ஆக்கியுள்ளார்கள். இவர்களின் ஆக்கங்கள் தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலேயே உள்ளன. தீட்சிதர் மணிப்பிரவாள நடையில் ஸ்ரீ இராகத்தில் ஸ்ரீ அபயம்பா என்றொரு கீர்த்தனை ஆக்கியுள்ளார். அதில் சமஸ்கிருதத்தோடு தென்னாட்டு மொழிகளான தெலுங்கு, தமிழ் ஆகியவையும் வருகின்றன. சியாமா சாஸ்திரிகள் கௌளிபந்து என்ற இராகத்திலே தருணம் ஈதம்மா என்று தமிழிலே ஒரு கீர்த்தனை பாடியுள்ளார். வேறு தமிழிலே இவர்களின் கீர்த்தனைகள் இருக்கின்றனவா என்று தெரியவில்லை.

ஆனால் இவர்களின் காலத்துக்கு முன்னர் தமிழ் மூவர் என இருந்தார்கள். முத்துத்தாண்டவர், அருணாசலக்கவி, மாரிமுத்தாபிள்ளை என்ற



இந்த மூவரும் தமிழிலே பல கீர்த்தனைகளை உருவாக்கியுள்ளார்கள். இவர்கள் மூவருக்கும் முன்னதாக வேறொரு மூவரும் இருந்தார்கள். தேவாரமூவர் என்ற, ஏழாம் எட்டாம் நூற்றாண்டில் இறைதுதியாக திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பண்ணிசையிற் பல தேவாரங்களைப் பாடியுள்ளார்கள். அந்தப் பண்ணிசையை இன்றும் பல ஓதுவார்கள் அழகாகப் பாடிவருகிறார்கள். ஆனால் ஏனோ அவற்றை இரசிப்பவர்கள் இல்லை.

இசையென்றால் தியாகராஜர் கீர்த்தனைதான், தீட்சிதர் கீர்த்தனைதான் பாடவேண்டும் என்று சிலரிடை ஒரு கொள்கை இருக்கிறது. அவர்கள் தமிழிலே மருந்துக்குக்கூட ஒரு உருப்படி பாடமாட்டார்கள். வேண்டுமானால் கச்சேரி முடிவிலே துக்கடா என்ற பெயரில் ஒரிரு

பாடல்கள் வரும். அதுவும் சிலவேளை அபாங், அது இதுவென்று ஹிந்தி, மராட்டி மொழிகளில் மட்டும் வரும். தமிழே வராது. சென்னையிலே பாடும்போதாவது ஒரு உருப்படியைத் தமிழிலே பாடக்கூடாதா?


அதேவேளை, தமிழிலேதான் பாடவேண்டும், வேற்றுமொழிகளிலே ஏன் பாடுகிறார்கள் என்று அவர்களைச் சிலர் சாடுகிறார்கள். இவர்களிலே பலருக்கு இசையில் நாட்டம் இல்லை. தமிழ் மொழிப்பற்றின் காரணமாகத் தமிழை மட்டுமே இவர்கள் விரும்புவர். வேறு மொழிகளை வெறுப்பர், தமிழ்மொழியில் வெறியர்களாகிவிடுவர். தமிழிலே பாடினால் மட்டுமே இசையை இரசிக்கமுடியும் என்பது இவர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கை. இவர்களிற் சிலர் இசைக்கச்சேரிகளுக்கே போவதில்லை. தியாகராஜசுவாமிகளின் ஆராதனையில் ஏன் தமிழ் பாடக்கூடாது? என்று கேட்கும் அளவுக்கே இவர்களின் சங்கீத அறிவு உள்ளது. இந்த இரண்டு கட்சிக்காரருமே தவறான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள்.



சில இராகங்களிலே தமிழ்க் கீர்த்தனைகளை யாரும் உருவாக்கவில்லை, அந்த இராகத்தை அறியவேண்டுமானால் அதைப் பாடியே ஆகவேண்டும் என்பது சரி. தியாகராஜ சுவாமிகள் நூற்றுக்கு மேற்பட்ட புதிய இராகங்களிலே கீர்த்தனைகள் பாடியுள்ளார். முத்தையா பாகவதர் கர்ணரஞ்சனி, விஜயநாகரி என்று இராகங்களை ஆக்கி அவற்றிலே அழகான உருப்படிகளையும் ஆக்கியுள்ளார். தீட்சிதரின் கீர்த்தனைகள் இராகபாவத்துக்கு நிகராக ஒன்றும் இல்லை எனலாம். இருந்தாலும் பாபநாசம் சிவன், கோபாலகிருஷ்ணபாரதி என்று பின்னாளிலே வந்த பலர் தமிழிலே மிக அழகான உருப்படிகளை ஆக்கி வைத்துள்ளார்கள். கோடீஸ்வர ஐயர் மேளகர்த்தா இராகங்கள் எழுபத்திரண்டுக்கும் தமிழிலே கீர்த்தனைகளை, முருகன் பெயரிலே ஆக்கியுள்ளார். சலநாட்டையில் ஏதையா கதி, இரசிக்கப்பிரியாவில் அருள்செய்ய வேண்டுமையா, நீதிமதியில் மோகனகர முத்துக்குமரா என்பவை மேடைகளிலே பாடப்படுபவை. ஊத்துக்காடு வேங்கடசுப்பையர் பல தமிழ்ப்பாடல்களை ஆக்கியுள்ளார். அண்மையில் மறைந்த வயலின்மேதை லால்குடி ஜயராமன் அவர்கள் பல மொழிகளிலே அருமையான தில்லானாக்களை ஆக்கியுள்ளார். சாருகேசி இராகத்தில் அவர் அமைத்த இன்னும் என்மனம் அறியாதவர் போல என்ற வர்ணம் இராக பாவம் அத்தனையையும் அடக்கிவைத்திருக்கிறது. ரேவதி இராகத்தில் கோலமுருகனைக் காண எண்ணி என்ற தில்லானா அருமை. அதேவேளை மோகனகல்யாணி இராகத்தில் சுந்தர மோகன ரூபம் என்று சமஸ்கிருதத்தில் தில்லானாவும் வேறு இராகங்களிலே தெலுங்கு மொழியிலும் தில்லானாக்களை உருவாக்கியுள்ளார். அதையும் நாமனைவரும் இரசிக்க முடிகிறதே!

இசைக்கு மொழி இல்லை. இசையைக் கேட்பவர்கள் தமிழோ, தெலுங்கொ, வடமொழியோ என்று பிரித்துப் பார்த்து இசையை இரசிப்பதில்லை. இராக ஆலாபனைகள், கற்பனை சுரங்கள் பாடும்போது அங்கே மொழி கிடையாது. மனோதர்ம இசையில் மொழி இல்லை. வாத்தியக் கருவிகளிலும் மொழி இல்லை. சாகித்தியங்கள் மட்டுமே மொழியில் உள்ளவை. மோட்சமுகலதா என்று சாரமதியிலே பாடினாலென்ன, அகிலாண்டேஸ்வரி என்று த்விஜாவந்தியிலே பாடினாலென்ன, காரணங் கேட்டு வாடி என்று பூர்விகல்யாணி இராகத்திலே பாடினாலென்ன இசையை விரும்பும் இரசிகர்கள் மொழியைப் பாராது அதை இரசிப்பார்கள். சங்கீதத்தை இரசிப்பவர்கள் இதுபற்றி அதிகம் அலட்டிக்கொள்ளமாட்டார்கள். தமிழ் மட்டுந்தான் வேண்டுமென்பவர்கள் இலக்கியக் கூட்டங்களுக்குத்தான் போகவேண்டுமே தவிர இசைக் கச்சேரிகளுக்கல்ல.

# மூதுரை



## படித்து அறிந்தவர்

ககவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்.

கிளைகளையும் கொம்புகளையும் உடைய நன்கு வளர்ந்தும், காட்டின் நடுவில் நின்றிருக்கும் மரங்கள் சிறந்தவை அல்ல. (அதுபோல) அறிஞர்களின் கூட்டத்தின் இடையில் கையில் கொடுத்த ஏட்டை படிக்க முடியாமல் நின்றவனும், ஒருவன் கருத்தின் அடையாளத்தைத் தெரிந்துகொள்ள முடியாதவனும் சிறந்தவன் அல்ல.

(கருத்து - கல்வி அறிவில்லாதவனும் பிறர் கருத்தின் குறிப்பை உணராதவனும் மரங்களுக்குச் சமம் என்பதாம்)

# அய்யன் திருவள்ளுவர் தமிழ் மன்றம்

## வழங்கும்

## மாதம் இரண்டு திருக்குறள்

**ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை இளிஒருவற்கு
அஃதிறந்து வாழ்தும் எனல்.**

ஒருவரின் வாழ்க்கைக்கு ஒளிதருவது
ஊக்கமேயாகும்.
ஊக்கமின்றி உயிர்வாழ்வது
இழிவு தருவதாகும்.


**இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்
சீரல் லவர்கண் படின்.**

சிறப்பான நிலையுங்கூட
அதற்குப் பொருந்தாத
கீழ் மக்களுக்குக் கிட்டுமானால்,
அவர்கள் வரம்புமீறிச்
செயல்படுவது இயற்கை.




இந்தத் திருக்குறள் நூலை லண்டனில் பெற
தமிழர் தகவல் இதழைத் தொடர்புக்கொள்ளுங்கள்

**விலை, 2 பவுண்ட் மட்டும்**


Best Food
11-13 Ealing Road Wembley
Middlesex HAO 4AA Tel : 0208 9000100
364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002, Fax : 020 8570 2323
259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269, Fax : 684 4677
எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும்
அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று மலிவு விலை
பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை
சேமியுங்கள்



கவிஞர் அப்துல் ரகுமான் கவிஞர் இன்குலாப் கவிஞர் மு.மேத்தா கவிஞர் அறிவுமதி
கவிஞர் நை.மு.இக்பால் கவிஞர் பழநிபாரதி கவிஞர் யுகபாரதி கவிஞர் இசாக்
உயிரைப் பிழியும் வரிகளில்
தாஜ்நூர்
இசைக்கோர்ப்பில்
தமிழ் நிலா
வழங்கும்
தமிழ்ப்பிள்ளை
இயக்கம்
இசாக்
தயாரிப்பு
அகமது யாசீன்
ஜாகிர் உசேன்
விரைவில்





Hotel Westeern
Hotel Westeern (Pvt) Ltd
35, Frankfurt Place
Bambalapitiya
Colombo 4, Sri Lanka
Email : infor@hotelwesteern .com
Web : www.hotelwesteern.com
Approved by the Ceylon Tourist Board
EELAM SHOP
399 Lewisham High Street
Lewisham
London SE13 6NZ
TeL : 020 8690 6545




செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்
கோடைகால விடுமுறையை முன்னிட்டு புடவைகள் நகைகள்
அனைத்தும் நம்ப முடியாத விலைக்கழிவில்
£ 200 Gift Voucher
இலவசம்
£ 100 Gift Voucher
FREE
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள
சீட்டுத் திட்டத்தில் இணைந்து
நீங்களும் ஒரு அதிஷ்டசாலி
ஆகுங்கள்.
Selvaraja Gold House & Textile
Exclusive Designer Jewellery & Sarees
162b, Mitcham Road London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269


Athavan TV
24 Hour Tamil Channel
Drama | Movies | Music | News | Sports | Live Events | Religion | Life Style
Free Channel
Satellite: (Eurobird 9a)
Freq: 11843
Vertical Symbol Rate: 27500
FEC – ¾
நம்ம நட்சத்திரங்களின் அணிவகுப்பு
Monday to Friday 8.30 PM
Sunday 9.00 PM
மேளம் கொட்டு தாலி கட்டு
Saturday 8.00 PM
Monday to Friday 6.00 PM
Monday to Friday 8.00 PM
மல்லி
Monday to Friday 6.30 PM
Daily 2.00 PM
Latest Movies
Sunday 11.00 AM
Monday to Friday 5.00 PM
NEWS UPDATE
BREAKING NEWS
News That's Making News!
8AM 1PM 7PM
விளம்பர தொடர்புகளுக்கு
UNITED KINGDOM 0203 318 2004
FRANCE 097 518 0123
ITALY 0247 921 666
GERMANY 0305 6837 0039
SWITZERLAND 0435 082 375
SWEDAN 085 250 0208
WWW.ATHAVAN.TV





லூசியத்தில் முதலாவது
தமிழ்க்கடை

# கற்பகம்

தங்கள் சேவையை
விரிவாக்கியுள்ளார்கள்

## KATPAGAM

**36, Loampit Hill Lewisham**
**London SE 13 7SW**
**Tel : 694 88 10**

உடன் காய்கறிகள்
பழவகைகள், இறைச்சி,
தமிழ் ஆடியோ, வீடியோ
தமிழ்படங்கள் அனைத்தும்
ஒரே இடத்தில்





# எவரஸ்ட்

24 Loampit Hill
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233

**அசத்தலான**
**அசைவ சுவைக்கு**







Breakfast Lunch Dinner

# Anthoorium

*World of Designs*
Jewellery & Textiles


**102, B Burlington Road**
**New Malden, Surrey KT3 4NT**
**Tel : 020 8942 8001 Fax : 020 8942 8007**
**Web : www.anthoorium.co.uk Email : sales@anthoorium.co.uk**


FROM 07TH NOV - UK CINEWORLD CINEMAS
ILFORD, FELTHAM, WEMBLEY, WANDSWORTH, MILTON KEYNES
LIVERPOOL, SHEFFIELD, STOCKPORT, LUTON
Advance Booking :
http://www.cineworld.co.uk or Call - 0871 220 1000
AT HARROW SAFARI CINEMA
FRI 7TH NOV @8.00PM, SAT 8TH NOV @8.00PM
SUNDAY 9TH NOV @5.00PM
Advance Booking :
http://www.safaricinema.com/ or Call - 0208 426 03 03
AT EASTHAM BOLEYN CINEMA
DAILY SHOWS : 2.00PM-5.00PM-8.00PM-(10.00PM FRI/ SAT ONLY)
Advance Booking - Call - 020 8471 6147
FOR FURTHER DETAILS : 020 8543 4477
SUBJECTED TO CHANGES IN SHOW TIMES WITHIN ADVERTISE PERIOD.



AYNGARAN INTERNATIONAL
PROUDLY PRESENTS
FOR FURTHER DETAILS
020 8543 4477
ஜெயங்கொண்டான், கண்டேன் காதலை
சேட்டை வெற்றிப்படங்களைத்தொடர்ந்து
இயக்குனர் கண்ணனின்
அடுத்த படைப்பு
ORU OORLA
RENDU RAJA
DIRECTION : R. KANNAN MUSIC : D. IMMAN
STARRING : VIMAL, PRIYA ANANDH, SOORI, NASSER, THAMBI RAMAIAH
VISHAKA SINGH, INIYA




லூசியத்தில்
தரமான
நகைக்கடை

Thinesh
Jewellers & Textiles

276, Lewisham High Street
Lewisham London SE 13, 6JZ
Tel : 020 8613 9569 www.thinesh-jt.com


WORLD TRAVEL & TOURS

IATA

**T. Arulthas**
Managing Director

111B Loampit Vale
Lewisham
London SE13 7TG
E-mail: info@worldtraveluk.com

Tel : 020 8465 9666
020 8465 9888
020 8465 9491
Fax : 020 8469 8204



Ilford பகுதியில் புதிய பல்பொருள் அங்காடி

SRI STORE

இது காலமும் SRI FOOD & WINE
என்ற பெயரில் இயங்கிய எமது கடை
புதிய பெயரில் தொடர்ந்து தங்கள் சேவைக்காக

396-400 Ilford Lane
Town Centre Ilford, IG1 2NB
Tel : 020 8553 7737






வாசித்து விட்டீர்களா

சைவ நீதி

கே.பி வித்யாதரன்
எழுதிய
சனிப்பெயர்ச்சி
பலன்கள்

எல்லா பிரபல
கடைகளிலும்
கிடைக்கும்


91 years of silk heritage
RmKV
Wedding Silks
handcrafted
Silks of India
Bridal Seven
தமிழ்நாடு
subrata bhowmick design
சென்னை: ஃபோரம் விஜயா மால், வடபழனி | ஃபீனிக்ஸ் மார்க்கெட் சிட்டி, வேளச்சேரி | பனகல் பார்க், தி.நகர்
கோயம்புத்தூர்: ப்ரூக்ஃபீல்ட்ஸ், ப்ரூக்பாண்ட் ரோடு | திருநெல்வேலி: வண்ணார்பேட்டை | பெங்களூரு: ஓரையன் மால்
www.facebook.com/RmkvSilks | www.rmkv.com

அரிசியின் அசல் சுவை குரக்கனின் நற்குணங்களுடன்
இப்போது லண்டனில்
ஏக விற்பனையாளர் Nixu நிறுவனத்தார்



139 Kumaravadivel & Guruparan 07460
07460302483




Dylon Sivam 07803 400 072